தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, புரட்டாசி 16 (1-10-'60). சனிக்கிழமை | இதழ் 16

அறிஞர் அண்ணா செய்திப்பாட்டு

திராவிடம் மீட்கப் பிறந்தவர்.

கழகப் பொதுச் செய
லாளர் நமது
கருத்தில் அவர் எப்
போதும் தலைவர்!
வளரும் தி. மு.
கழகம் மேலும்
வளரப் பொறுப்பைச்
சுமந்த வீரர்!

உளத்தால் மெய்யால்
நாட்டை என்றும்
உயர்த்தப் பாடு
படுவார் அண்ணா!
வளத்தால் நிறைந்த
சொல்லும் மிகவே
வழங்கி நாட்டை
விழிக்கச் செய்தார்!

குடும்பத் தலைவர்
ஆவார் எங்கள்
கொள்கை வகுத்துக்
கொடுத்த ஆசான்!
இடும்பை பற்பல
வரினும் அண்ணா
இட்ட கட்டளை
ஏற்று முடிப்போம்!

திராவிடம் மீட்கப்
பிறந்தார் அணியாய்த்
திரண்ட படையை
நடத்திச் சிறந்தார்
திராவிட நாட்டைப்
பெற்றே வளங்கள்
சிறக்கச் செய்யும்
மறக்குல வேந்தர்.

பகலவன் ஒளியைப்
போலே எங்கும்
பகுத்தறி வொளியே
பரவச் செய்தார்
சகத்தினில் இவர்போல்
தலைவர் எங்கும்
சந்தித்த தில்லை
பெருமை யடைவோம்!

—நாகநாதன்.

இதே கிழமை-இதே நேரம்

மா. தங்கவேலர்

புகை வண்டி புறப்பட்டது! எழும்பூர் நிலயத்திலே வழியனுப்ப வந்து காத்திருந்த மாலா, தனது பட்டுக் கைக்குட்டையை உயரத் தூக்கி ஆட்டினாள். மேக வீட்டினுள்ளேயிருந்து எட்டிப் பார்த்த நிலவைப் போல, வண்டியின் ஜன்னலுக்கு வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த அன்புத் தோழிகள் வளை அசைத்து நகை முழக்கினர். அந்த அன்பு முழக்கம் தோழிகளுக்குள்ளே ஒரு வகை இன்பத்தையும், சக பிரயாணிகளுக்குள்ளே சகிக்கமுடியாத தலை வேதனையையும் தந்துகொண்டிருந்தது. இதுபோன்ற காட்சிகளை எத்தனையோ முறை கண்டு சலித்துவிட்ட திருவனந்தபுரம் துரித வண்டி ஓலமிட்டுக்கொண்டே ஓடிக்கொண்டிருந்தது. வண்டி பார்வையிலிருந்து மறைந்ததும்...

பெருமூச்சோடு திரும்பினாள் மாலா. அவளது முகத்திலே அரும்பிய முத்து முத்தான வியர்வைத் துளிகள் பட்டுக் கைக்குட்டையை ஈரமாக்கிக் கொண்டிருந்தன. எதிரே தெரிந்த நடமாடும் புத்தகக் கடையின் மீது அவளது பார்வை பாய்ந்து நிலைத்தது, அந்தப் பார்வை அங்கே, அருகே நின்ற கண்ணாடியணிந்த வாலிபனைச் சந்தித்தபோது...திடுக்கிட்டது!

மணவாளன்...அதுதான் அந்தக் கண்ணாடியணிந்த வாலிபன் மயக்கும் உடையோடு நின்றுகொண்டிருந்தான். தயங்கி நின்ற மாலாவை அன்போடு அழைத்துக்கொண்டே கட்டுப் புத்தகங்களை எடுத்து அவள் முன்னே நீட்டினான். நடமாடும் கடைச் சிறுவன். அழகிய முகப் பமைந்த ஆங்கில நாவலொன்றை எடுத்துக்கொண்டு, பணமும் தந்துவிட்டு வேகமாகப் புறப்பட்டாள மாலா.

எழும்பூர் ரயில் நிலயத்தின் முன்னேயிருந்த பரந்த வெளிக்கு அவள் வந்திருந்தும், பரவி வந்த சிகரெட்டுப் புகை மறையவில்லை, திகிலோடு திரும்பினாள். மணவாளன் தொடர்ந்துகொண்டிருந்தான் 'ஏன் அவன் இப்படி நெருங்கி வர வேண்டும்? தனிமையை எதிர்பார்த்த அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதா?.. மாலா மருண்டாள்: எழும்பூர் ரயில் நிலயத்தையொட்டியேயிருந்தது அவளது வீடு. அதனாலேயே துணையின்றி வந்திருந்தாள தோழிகளை வழியனுப்ப. ஆனால் வழியிலே...மணவாளன தொடரும்படியாகிவிட்டதே! குழம்பிய நெஞ்சோடு குதிரைபோல விரைந்து சென்றாள் அந்தக் குமரி! பறந்த வைத்தவனுக்குப் பரவசத்தைத் தந்து: பாதிக்குமேலே மேனியைத தேய்த்துக்கொண்ட சிகரெட்டைப் பாதையிலே வீசினான். அவனது அந்தச் செயல் அவனும் விரைந்து நடை போட்டு வருவதை அவளுக்கு விளக்கியது.

அவளது வீட்டின் திருப்பம் வந்தது அங்கே வந்ததும், துணிந்து திரும்பிப் பார்த்தாள் மாலா. அவனும் திருப்பத்திலே இலாவகமாக நுழைந்தான்.

'வரட்டும் வீட்டு வரையிலும் வந்து சேரட்டும். பிறகு, இந்த மலாவைப் புரிந்துகொள்ளட்டும்!' மனத்துக்குள்ளேயே குமுறிக்கொண்டாள். மாலா வீட்டை நெருங்கிய போது, மாடி அறையிலே எரிந்து கொண்டிருந்த மின்விளக்கு 'அப்பா' இருப்பதை அவளுக்கு எடுத்துச் சொல்லியது. இப்போது கொஞ்சம் இரக்கம் பிறந்தது மாலாவுக்கு-மணவாளன் மீது! 'அவன் தன்னைத் தொடருவதை அப்பா பார்த்துவிட்டால் தப்பாக நினைத்துவிடுவாரே. அவனையும் சாமானியமாக விட்டுவிடுவாரா என்ன? சஞ்சலப்பட்ட நெஞ்சத்தோடு படியிலே கால் வைத்தாள் மாலா அவளுக்குப் பின்னே வந்து நின்றான் மணவாளன் 'சிரிப்பு ஒரு கேடா' என்று மனத்தில் நினைத்துக்கொண்ட, மட மட வென்ற படிகளைக் கடந்து கீழிறங்கி வந்தாள் மாலா. வந்த வேகத்திலே வார்த்தையைக் கொட்ட ஒரே ஒரு நிமிடம், அவள் கட்டிக்கொள்ள விருந்த அசட்டுப் பட்டத்தை-விரட்டியடித்தது.

சித்திர வேலைப்பாடமைந்த சிறு பையை மணவாளன், மாலாவிடம் நீட்டிக்கொண்டே... புத்தகக் கடையிலேயே இதை மறந்து வைத்துவிட்டீர்கள் இதைத் தந்து போவதற்காகத்தான் தொடர்ந்து வந்தேன். நீங்களோ எனக்கும் முன்னதாக வேக நடை போட்டு வந்துவிட்டீர்களே!''

"உங்கள் மேல் நம்பிக்கையிருக்கிறது எனக்கு எல்லாம் சரியாகத் தானிருக்கும் போய் வாருங்கள்''

"போய் - ரவா! ஏன் மீண்டும் பணப் பையை எடுத்துத் தருவதற்கா?''

"வேடிக்கையாகப் பேசுகிறீர்கள் நிலைமை புரியாமல். மாடியிலே அப்பா இருக்கிறார்...''

"ஓ! அவரிடமே சொல்லலாமே! இன்ஸ்பெக்டரின் மகள் இப்படி கவனக் குறைவாக நடந்துகொள்வதா என்று கேட்கிறேனே!''

என்று பேசி முடித்தான். தனது தவற்றுக்கும், மறதிக்கும ஒரு பக்கம் வேதனைப்பட்டாலும், மறு பக்கம் அவனோடு வீட்டு வாசலிலே நின்று பேசுவதை நினைத்து சங்கடப்பட்டுக் கொண்டே "ஓஹோ!... அப்படியா... மிக்கநன்றி...'' என்று பேசி நிறுத்திக் கொண்டாள். 'நன்றி' பெற்றதும் போய்விடுவானென்று எதிர்பார்த்தாள். அவனோ, "பணப் பையை மறக்கும் அளவுக்கு அவசரப்பட்டு வரலாமா? வைத்த பணம் சரியாகயிருக்கிறதாவென்று பார்த்துச் சொல்லுங்கள் நான் போகிறேன்'' என்று பேச்சை வளர்த்தான்.

மாடியிலிருந்து ஆள் இறங்கி வரும் சப்தம் கேட்டது.

அவசரத்தோடு படிகளைக் கடந்து கொண்டே, "அப்பா வருகிறார். உங்களின் உதவிக்கு ஆயிரம் முறை நன்றி சொல்லுகிறேன். தயவு செய்து போய்விடுங்கள்'' என்று சொல்லிவிட்டு உள்ளே பாய்ந்தாள் மாலா. துள்ளிச் செல்லும் மான்குட்டியின் அழகு அவனது நினைவிலே தெரிந்தது கண்ணாடியைச்சரிபடுத்தி கொண்டு, புன்னகையோடு புறப்பட்டான் மணவாளன்.

உள்ளே புகுந்த மாலாவுக்கு முன்னே, மாடியிலிருந்து இறங்கிய சுகுமார் வந்துகொண்டிருந்தான். 'அப்பா வரவில்லை' என்பதை அறிந்ததும் நீண்ட பெருமூச்சுவிட்டாள். மாடியிலிருக்கும் அப்பாவின் பார்வையிலே படாமலேயே மணவாளன் திரும்பிவிட்டதை நினைத்து மகிழ்ந்தாள். அந்த மகிழ்ச்சியும், சுகுமாரின் பேச்சால் தகர்ந்துகொண்டிருந்தது.

"மாலா! மணவாளனிடம் என்ன பேச்சு உனக்கு? அவனைத் தெரியாதா எத்தனென்று! படித்தவன் ஆனால் பண்பற்றவன்'' என்று அலட்சியமாகப் பேசிவிட்டு 'பூட்ஸ்' காலை சிமெண்டுத் தரையிலே தேய்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன சுகுமார்! அவனைப்பற்றி நீங்கள் எடுத்துச் சொல்லியா நான் தெரிந்துகொள்ள வேண்டும்; அப்பா, அடுக்கடுக்காகச் சொல்லுவாரே அந்த மணவாளனைப்பற்றி. ரயில் நிலயத்தின் புத்தகக் கடையிலே பணப்பையை மறந்து வைத்துவிட்டேன். அங்கே சுற்றிக்கொண்டிருந்த அவனது பார்வையிலே அதுபட்டிருக்கிறது. நல்லவனைப்போல எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்து வந்து தந்தான். நானும் நன்றி சொல்லி வாங்கிக் கொண்டேன். அவனும் போய்விட்டான்.''

"போய்விட்டானா? பணப்பை எங்கே? பணத்தைச் சரி பார்த்தாயா?''

"பணம் குறைந்தா லென்ன? தொலைவிட்டதே! அது போதுமென்று இருந்துவிட்டேன்!''

"இப்படியும் அசட்டுப் பெண்ணாக இருப்பாயோ?''.. என்று கூறிக் கொண்டே மாலாவின் கையிலிருந்த அழகுப் பையை வாங்கி, வாசல் வரை நடந்து வந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து, மறைவாகச் சட்டைப் பையிலே திணித்துக் கொண்டு மீதிப்பணத்தை எண்ணி மாலாவிடம் கணக்குச் சொன்னான் சுகுமார்.

அவன் சொல்லிய கணக்கைக் கேட்ட மாலா முதலிலே சிரித்தாள். பிறகு...அமைதியாக, "குறைவது இருபது ரூபாய்தான்- அதிகமில்லை'' என்று கூறினாள். இதயத்தில் சிரித்துக்கொண்டே, முகபாவத்தை மாற்றி, 'இருபது ரூபாயா? விடக்கூடாது அவனை. அப்பாவிடம் சொல்லி...எச்சரித்து வைக்க வேண்டும்! என்று பேசினான் பரப்போடு.

கைப்பையை ஆட்டிக்கொண்டே, "வேண்டாம் சுகுமார் அப்பாவிடம் சொன்னால் எனக்குத்தான் சிரமம் அதிகமாகும். இது என்னால் ஏற்பட்ட தவறுதானே. மேலும், இதுபோல நம்மிடம் அவன் நடந்துகொண்டால், அப்போது கவனித்துக்கொளளலாம். நீங்கள் போய்வாருங்கள், சுகுமார்!'' என்று பேசி முடித்துவிட்டு உள்ளே ஓடினாள் மாலா. குறுநகையோடு சுகுமாரும் வெளியேறிக்கொண்டிருந்தான்.

★

அழகுமயில் மாலா, சப்இன்ஸ்பெக்டர் சாம்பசிவத்தின் திருக்குமாரி. சுகுமார், இன்ஸ்பெக்டருக்குப் பல வழியிலும் வேண்டியவனுகவிருந்தான் அவன். அவளோடு பழகுவதற்குத் தடை போடவில்லை சாம்பசிவம். எனவே, வேலி போடாத அந்த மலர்ச்சோலையை நாடிவந்து போய்க்கொண்டிருந்தான், சுகுமார். மணவாளனைக் கண்டாலே பயந்து ஒதுங்கினான் சுகுமார். பக்கத்துணையாக இன்ஸ்பெக்டரிருந்தும் அவனுக்கேன் அந்த பயம்?...இன்னும் சொல்லப்போனால் இன்ஸ்பெக்டர் சாம்பசிவமே மணவாளனைக் கண்டு மட்டுமல்ல, அவனது பெயரைக் கேட்டதுமே நடுக்கமடைவார். அந்த

— 10-ம் பக்கம் பார்க்க —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 1-10-'60 | இதழ் 16

போற்றுகிறோம்! பாராட்டுகிறோம்!

திருவள்ளுவர் ஆண்டு 1991 புரட்டாசித் திங்கள் 10-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை.

இந்த ஞாயிற்றுக்கிழமை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றிலே முக்கியமான இடம் பெற்றுவிட்டது.

இந்த ஞாயிற்றுக்கிழமை எப்போது வரும், எப்போது வரும் என்று இலட்சக் கணக்கான இதயங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தன.

இந்த ஞாயிற்றுக்கிழமை கழகத்தின் இலட்சியப் பயணத்திலே ஒரு புதுத் திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது அந்தத் திருப்பம் எப்படிப்பட்டதாயிருக்குமோ என்று எண்ணற்ற இளங்காளைகள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த ஞாயிற்றுக்கிழமை கழகத்திலே எரிமலை வெடிக்கப் போகிறது; பூகம்பம் நிகழப் போகிறது கழகமே கலையப் போகிறது என்றெல்லாம், காமராஜரும் அவருடைய படை பட்டாளங்களும் ஊருக்கு ஊர் பேசிக்கொண்டார்கள்.

இந்த ஞாயிற்றுக்கிழமையன்று கழகப் பொதுச் செயலாளர் தேர்தல் நடக்கவிருந்தமையை முன்னிட்டுத்தான், இவ்வளவு ஆர்வத்தோடு எல்லோரும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த ஞாயிற்றுக்கிழமையன்றுதான், இதுவரை பொதுச் செயலாளராக இருந்த திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இடத்திற்கு வேறொரு பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதாக இருந்தது.

இனி வருகின்ற பொதுச் செயலாளர் எப்படிப்பட்டவராக இருப்பாரோ? எவ்வளவு திறமையுடையவராக இருப்பாரோ? எத்தகைய ஆற்றல் படைத்தவராக இருப்பாரோ? என்று மக்கள் எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கழகமே உயிரென்று கருதியிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மட்டுமல்லாமல், நாட்டுப்பற்றுடைய நல்லோரின் இதயமெல்லாம் இந்த ஞாயிற்றுக்கிழமையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தன.

ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்வைப் பொறுத்துத்தான் இந்தத் தென்னகத்து மக்களின் வாழ்வும் அமைய இருக்கிறது என்பதை எல்லோரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் வளமாக வளர்ந்தோங்கினால் தான் தென்னகத்தின் வளமும் வாழ்வும் வளர்ந்தோங்க வழியிருக்கிறதுஎன்பதை எல்லோரும் ஐயந்திரிபற அறிந்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையான தன்மையிலே ஒரு சிறு அசைவு ஏற்பட்டாலும் இந்தத் தென்னக அரசியல் வாழ்விலே ஒரு பேரதிர்ச்சி ஏற்பட்டுவிடும் என்பதை நன்றாகத் தெரிந்து வைத்திருந்ததால் தான் காமராசர் போன்றவர்கள், ஏதாவது அவ்வாறு நிகழாதா என்று ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது!

நல்லவர்கள் இதயம் பூரிக்க, நாட்டுப் பற்றுள்ளவர்கள் உள்ளம் குளிர, நாட்டு மக்களின் நல்வாழ்விலே அக்கறைகொண்டவர்களின் அகத்திலெல்லாம் ஆனந்த வெள்ளம் நிறைய, கழகக் காளைகளின் கண்களில் எல்லாம் இன்பக் கண்ணீர் வழிய, பொதுக்குழுவின் அந்த நல்ல முடிவு நாட்டினர்க்கு அறிவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய பொதுச் செயலாளராக அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்ற அந்த அறிவிப்பு, திராவிட மக்களின் இதய பீடங்களிளெல்லாம் வியப்புணர்சியையும் இன்ப உணர்ச்சியையும் ஒருங்கு கலந்து நிலவச் செய்தது.

அண்ணா!

இந்த மூன்றெழுத்துக்கள் இளங்குருதி கொந்தளிக்கும் தமிழ்ச் சிங்கக் கூட்டங்களின் நெஞ்சிலே அன்புச் சுடர் வீசி அணையாது வீற்றிருக்கும் பேறு பெற்றவை!

அண்ணா!

இந்த மூன்றெழுத்துக்கள், உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று முழக்கும் வீர இளைஞர்களுக்கு வலிமையும் திண்மையும் சேர்க்கக் கூடிய ஆற்றல் படைத்தவை.

அண்ணா!

இந்த மூன்றெழுத்துக்களுக்குரிய அந்தக் குள்ள, மான உருவம் படைத்த தலைவர்தான் தான் இந்தத் திராவிட நாட்டை மீட்டு, உலக அரசுகள் அனைத்துக்கும் சரியாசனத்திலே வைத்துத் திராவிடர்கள் அனைவரும் உரிமையோடு தலைநிமிர்ந்து நடக்கும நிலைபெறச் செய்யப் பிறந்திருக்கிறவர் என்று இந்த நாடு நம்பிக் கொண்டிருக்கிறது.

இந்தத் திராவிட நாட்டு மக்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டுள்ள ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா!

அண்ணன் தம்பியர் வாழ்வுக்கு யாரேனும் ஓர் எடுத்துக் காட்டாகக் கூற வேண்டும் என்றால் இதோ நாங்கள் இருக்கிறோம் என்று கூறக்கூடிய இலட்சக் கணக்காண தம்பியர்கள் புடைசூழ இருக்கின்ற ஒரே தலைவர் அறிஞர் அண்ணா!

தலைவராக இருந்து வழிகாட்ட வேண்டிய அண்ணா, கழகப் பொதுச் செயலாளராக இருந்து செயலாற்ற விரைந்து வந்த செய்தி பலருக்கும் ஆச்சரியத்தை யளித்தது என்பதில் ஐயமில்லை. அதேசமயம், அதே செய்தி ஒரு சிலருக்கு-கழகம் கலைந்து விடப்போகிறது என்று மனப்பால் குடித்துப் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு அதிர்ச்சியளித்து விட்டது என்பதிலும் ஐயமேயில்லை!

இந்த அதிர்ச்சி தாங்கமாட்டாமல் சிலர் பிதற்றியிருக்கிறார்கள். கழகத்திற்குள்ளே போட்டியும் பூசலும் ஏற்பட்டு விட்டது, அதைச் சமாளிக்கவே அண்ணாத்துரை செயலாளராக முன் வந்துவிட்டார் என்று உளறிக் கொட்டியிருக்கிறார்கள்.

இந்த உளறலில் ஏதாவது பொருள் இருக்கிறதா?

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின், முதற் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். அதன் பிறகு, திரு, இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொதுச் செயலாளராக இருந்து அண்ணாவின் வழியில் அணுவளவும் பிசகாமல் சிறந்த முறையில் கழகத்தை நடத்திச் சென்றார்கள். இப்போது மீண்டும் அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராகியிருக்கிறார்கள். முன்வரலாற்றை மறந்துவிட்டபோது வேண்டுமானால் இது வியத்தகு செய்தியாகவும், வேறு பல எண்ணங்களைத் தோன்றச் செய்வதாகவும் இருக்கலாமே தவிர, உண்மையில் அவ்வாறில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் வெறும் அரசியல் கட்சியல்ல- வெறும் அரசியல் கட்சியாக இருந்தால் தான், அதிலே பதவிகளைப் பெறுவதே பெரும் பிரச்சினையாகக் கருதுகிறவர்கள் இருப்பார்கள். அந்தப் பதவியின் காரணமாகப் போட்டியும் பூசலும் மட்டுமல்லாமல் ஏசலும் பிளவும் ஏற்படும். பதவிகளின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிய வாக்கு வாதங்களும் அங்கே தான் ஏற்படும், ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலையியக்கம்.

திராவிட நாட்டை வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பது நம் இலட்சியம். இந்த இலட்சியத்திற்காகப் போராடும் நமக்குப் பதவிகளில் மோகமும் இல்லை, அந்தப் பதவிகளின் உயர்வு தாழ்வு பற்றி ஆராயக் கூடிய வேகமும் நம்மிடத்திலே காண முடியாது.

இந்தப் போராட்டம் வெற்றி பெற நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை மேற்கொண்டு பணியாற்ற வேண்டும். அப்படிப்பட்ட பொறுப்பு ஒன்றைத்தான்—பொதுச் செயலாளராக முன் வந்திருக்கும் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அவர்கள் மீண்டும் பொதுச் செயலாளராக இருந்தால் கழகம் மேலும் வலிவு பெற்றுத் திகழ முடியும் என்று பொதுக் குழுவினர் கருதியதன் காரணமாக அண்ணா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

பொதுக் குழுவின் வேண்டுகோளுக் கிணங்கி அண்ணா அவர்கள் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்த பெருந்தன்மையை எண்ணி நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். தம்பியர்கள் வேண்டியபோதெல்லாம் வேண்டிய வேண்டியாங்கு உதவ முன்வருகின்ற நன் மனம் படைத்த அண்ணா அவர்களை நாம் வரவேற்றுப் போற்றுகிறோம்.

புதிய பொதுச் செயலாளராகப் பணியாற்றும் பொறுப்பினை மேற்கொண்ட அண்ணா அவர்களை வரவேற்கும் அதே நேரத்தில், இதுகாறும் கழகத்தைக் கட்டிக் காத்து, வலிவும் பொலிவும் பொருந்திய ஒரு மாபெரும் இயக்கமாக வளர்த்துத் தந்து, பெரும் சாதனைகள் புரிந்திருக்கிற நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் நம் பாராட்டுக் கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரோமாபுரி ராணிகள்

......அருப்புக்கோட்டை எம்.எஸ். இராமசாமி......

எந்த நாடு போர்க்குணத்தை இகழ்ந்ததோ, எந்த நாடு துறவுத் தத்துவத்தைப் போற்றிப் புகழ்ந்ததோ, அந்த நாடு, மாற்றார் கைப்பட்டு, மானமழிந்து, வாழ வகையற்று, சீர்குலைந்து, சின்னாபின்னப்படுவது உறுதி!

எந்த நாட்டில் நீண்ட கால வாழ்க்கை வளர், மாற்றமடையாமல் ஒரே சீராக இருக்கிறதோ, அந்த நாட்டு மக்கள், போக போக்கியத்தில் புரண்டு, போர்க் குணத்தை இழந்து, மாற்றார் கைப்பட்டு, வளமிக்க நாடிருந்தும் வறுமையாளராவார்கள்!

அத்தகைய வாழ்ந்து கெட்ட வறுமையாளர் நாட்டில்தான், மன அமைதி பெறுவதற்காக வேதாந்தம்-பரதேசித் தத்துவம் பெருமைப் படுத்தப்படும்! படித்த சோம்பேறிகள், துறவிகள், வேதாந்திகள், மத குருமார்கள், என்கிற பெயர்களால் பிரபலமடைவார்கள்! அப்படியானால் தானே அவர்களுக்குச் சுகபோக வாழ்வு கிடைக்கும்!

ஆதியில். ஐரோப்பாவின் மாபெரும் சாம்ராஜ்யமாகத் திகழ்ந்தது ரோமப் பேரரசு ஒன்றுதான். அதுவே, ஐரோப்பாவின் முழு முதற் பேரரசு!

இன்றைய ஐரோப்பாவின் மிகப் பெரும் பகுதியில் வெற்றிக்கொடி பறக்க, கொற்றக் குடை நிழலில், நீண்ட காலமாக நிலவி நின்ற பேரரசும் ரோம் சாம்ராஜ்யம்தான்!

அந்தப் பேரரசு, சரிந்து தரை மட்டமாகிப் போனதற்குரிய காரணங்களை அறிவாளர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான ஏடுகள், ரோமப் பேரரசு வீழ்ச்சியின் காரணங்களை விளக்கி ஆங்கிலத்தில் தீட்டப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்றின் பகுதிதான் ரோமாபுரி ராணிகள்! அறிஞர் அண்ணாவால் விரிவாகத் தமிழ்ப்படுத்தப்பட்டது!

அரசியல் நேர்மையும், சரித்திர அறிவும் அற்ற, தமிழகத்து முட சிகாமணிகளால், இழித்தும் பழித்தும் பேசுவதற்கு இலக்காக இருந்து வருகிறது-அண்ணாவின் ரோமாபுரி ராணிகள்! ஆனால், பண்டித நேரு எழுதிய உலக சரித்திரத்திலும், ரோமாபுரி ராணிகள் இடம் பெற்று 'காமக் கோட்டம்' அமைத்திருக்கிறார்கள் என்பதை, இந்த முட சிகாமணிகள் எங்கே அறிந்திருக்கப் போகிறார்கள்!

ஒரு நாட்டினுடைய நெடுங் கால சுக போக வாழ்க்கை, அங்குள்ள மக்களை எத்தகைய இழிநிலைக்குக் கொண்டு செல்கிறது என்பதை. எடுத்துக் காட்ட ரோமாபுரி ராணிகள் சிறு துளி!

ரோம் நாட்டுச் சீமான்களின் இன்ப உணர்ச்சியை-சிறு பகுதி காட்டுவதே ரோமாபுரி ராணிகள்!

மனித வாழ்வின் நிகழ்ச்சிகள் இன்பம் மட்டும் அல்லவே! வள்ளுவன் வகுத்துக் கூறியதுபோல அறம், பொருள், இன்பம் மூன்றும் கொண்டதல்லவா வாழ்வின் இயக்கம்! வள்ளுவன் கூற்றுப்படி பார்த்தால், இன்பம், வாழ்வின்-அதன் இயக்கத்தின்-கடைசி நிலை அல்லவா! அறமும் பொருளும் வாழ்வின் பேரிடத்தையன்றோ பிடித்துள்ளன!

பேரிடம் பெற்ற அறமும், பொருளும், ரோமர்களின் சுகபோகப் பொற்காலத்தில் எந்த உருவத்தில் இருந்தன? இவற்றை விவரிக்கவே நூற்றுக்கணக்கான ஏடுகள் ஆங்கிலத்தில் இருக்கின்றன.

அந்த ஏடுகளின் தீர்ப்புகள் தான் என்ன? ரோம் சாம்ராஜ்யம் வீழ்ந்ததற்குக் கூறும் காரணங்கள் என்ன? ஏடுகளை எழுதிய அறிஞர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள்?

அவர்கள், ஏறத்தாழக் கூறிய ஒரே முடிவைத்தான், சுருக்கமாக தொடக்கத்திலேயே பொதுவாகச் சொன்னோம்! போர்க்குணம் மழுங்கி, போக போக்கியம் மிகுந்ததாலேயே அடலேறுகள் உலவிய ரோமாபுரியில். ஆடல் அழகிகளும் காமக்குரங்குகளும் உலவினார்கள்!

போர் முரசு ஒலி கேட்டுப் பூரித்த திண்தோள் மறவர்கள் வழிவந்தவர்கள், ஆடல் அழகிகளின் பாதச் சதங்கை ஒலியில் மெய்ம்மறந்தார்கள்!

நாடு மாற்றார் கைப்பட்டது! வறுமை தாண்டவமாடத் தொடங்கியது! படித்த சோம்பேறிகள் வேதாந்த வித்தகர்களாக, சோதிடப் பண்டிதர் களாக மாறினார்கள்! வீரமும் வாழ்வும் பரிகாசத்திற்கு உரியனவாயிற்று!

''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்'' ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்கிற சாவூர்த் தத்துவங்களை வேதாந்தச் சோம்பேறி பரப்பினான்! அந்தத் தத்துவங்கள் வாழ்விழந்த மக்களுக்கு அமைதி ஊட்டப் பயன்பட்டன; வேதாந்திக்கு உழைக்காமல் உண்டு கொழுக்க உதவி செய்தன!

சோதிடன் கிரகங்கள் தீமை செய்வதாக வர்ணித்தான்! 8 ஆண்டுகளுக்கு சனியின் தொல்லை என்றான்! 2 ஆண்டுகள் குருவின் தொல்லை என்றான்! மக்களை நல்ல கிரகத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும்படி செய்தபெருமை சோதிடனைச் சார்ந்தது!

''நாட்டின் நல்வாழ்வுதான் வீட்டின் நல்ல வாழ்வு'' என்ற அரசியல் ஞானம் அற்றுப்போனதால்தான் சோதிடம் பெருமைக் குரியதாயிற்று!

'எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும் நல்வாழ்வு'' என்ற நிலைபோய், நல்வாழ்வு நிலையற்றதாக 'சிப்டு' முறைபோல ஆகிவிட்டதால், துயரப்படும் மக்கள் திடீரென்று சிறுவாழ்வு பெறுவதும் அது. நிலையில்லாமல் இரண்டோர் ஆண்டுகளில் மாறிப்போவதும், சோதிடத்திற்கு ஆக்கந்தருவதாக அமைந்தன கிரகங்களின் மாறுதலாலேயே வாழ்வும், வீழ்ச்சியும், ஏற்பட்டதாகச் சொல்லி சோதிடன், சாதுரியமாக மக்களை நம்பவைத்தான்!

இது, ரோமாபுரிக்கு மட்டும் உரியதல்ல நன்றாக வாழ்ந்து நாசமான எல்லா நாட்டுக்கும் உரியதுதான்!

ரோமாபுரியின் நிலையை தமிழகத்தில் காண்கிறோம்-நாள்தோறும் அனுபவிக்கிறோம்!

உலகத்திலேயே வீரஞ்செறிந்த மானமறவர்கள் தமிழர்கள்தான் என்று. அவர்களுடைய இலக்கியங்கள் சான்று கூறி நிற்கின்றன. நெடுங் காலமாக சுகவாழ்வு பெற்றிருந்தவனும் தமிழன்தான்!

வீரத்திற்கும், போர்முறைக்கும், இலக்கணம் வைத்திருப்பவன் தமிழன்தான்!

இது, உலகத்தில் எந்த மொழியும் எவனும் பெற்றிராத புதுமை-பெருமை!

> விழித்தகண் வேல்கொண்டு
> எறிய அழித்துஇமைப்பின்
> ஓட்டன்றோ வன்கண்
> ணவர்க்கு.
>
> (குறள்-775)

என்றார் வள்ளுவர். அதாவது, போர்க்களத்தில் பகைவரைச் சினங்கொண்டு விழித்த கண்களை, பகைவன் வேல் எறிவது கண்டு சிமிட்டினாலும், மானமிக்க மறவர்களுக்கு இழுக்காகும் என்கிறார்,

> உலைவிடத்து ஊறஞ்சா
> வன்கண் தொலைவிடத்துத்
> தொல்படைக் கல்லால்
> அரிது.
>
> (குறள்-762)

என்று, படைவீரர் இலக்கணம் கூறுகிறார் வள்ளுவர். அதாவது கூடவந்த படைவீரர்கள் பலர், போர்க்களத்தில் பகைவரால் செத்தொழிந்தபின்னும், முன்வைத்த காலைப் பின்வைக்காமல், தன்மேல் பகைவர்கள் வீசுகின்ற கொடிய ஆயுதங்களுக்கும் அஞ்சாமல், உயிரைப் பணயமாக வைத்து, இறுதி மூச்சு உள்ளவரை எதிர்த்து நிற்பதே, வீரஞ் செறிந்த படை என்று சொல்லத்தக்கதாகும். அத்தகைய வீரம். பரம்பரையாக நிலைத்து வருவதாகும் என்கிறார். இதனையே:—

> கூற்றுடன்று மேல்வரினும்
> கூடி எதிர்நிற்கும் ஆற்றல்
> அதுவே படை.
>
> (குறள் 765)

என்று. வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார். அதாவது, ''இனிமேல் பகையாளன் கையால் சாவதே நிச்சயம்'' என்ற நிலைமை ஏற்பட்ட போதும், அஞ்சாமல் கூடி நின்று எதிர்ப்பதே படை வீரர்களின் இலக்கணம் என்கிறார்! இதனையே:—

> வெங்குருதி மல்க
> விழுப்புண் உகுதொறும்
> இங்குலிகம் சோரும்
> வரையேய்க்கும்-பைங்கண்
> இனம்போக்கி நின்றான்
> இகல்வாட்டி வேந்தன்
> மனம்போல வந்த மகன்

என்று, புறப்பொருள் வெண்பா மாலை கூறுகிறது. அதாவது, படைத் தலைவனாக வந்த அரசன் மனம்போல, வெற்றியே குறியாக, பகைவர்களைப் போர்க்களத்திலே வென்று திரும்பிய வீரனுக்கு, உடம்பெல்லாம் பகைவர்கள் வீசிய ஆயுதங்களால் ஏற்பட்ட விழுப் புண்கள், குருதியைக் கொட்டிக்கொண்டிருந்தன. அப்படிச் சொரிகின்ற குருதி சிவந்த சாதி லிங்கக் கட்டிகள் (சாதிலிங்கம் 64 வகை பாடாணங்களில் ஒன்று) போலவும், அந்த வீரன் சாதிலிங்கம் சொரியும் மலைபோலவும் காணப்பட்டான் என்பதே. இத்தகைய சான்றுகள் ஆயிரக்கணக்கில் காணலாம் பழந் தமிழ் நூற்களில்!

தமிழர்கள் மான மறவர்கள். ''மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர் நீப்பர் மானம் வரின்'' என்றார் வள்ளுவர்.

''மானம் வேண்டுமா? உயிர் வேண்டுமா?'' என்றால், ''உயிரைப்பற்றி அக்கறையில்லை மானமே வேண்டும்'' என்று கூறும் மறக்குடி மைந்தர்கள் தமிழர்கள்!

அத்தகைய மான மறவர் பரம்பரையிலே வந்த இந்த நாள் தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள்?

இதற்கு, திரு. காமராசரே சான்று! அவர்தான் 'பச்சைத்தமிழர்' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டவர்.

வாழ்விழந்து. வளமிழந்து வறுமை வாய்ப்பட்டு, அலங்கோலமாகி, அயல் நாடு சென்று வயிறுகழுவும் ஈனப்புத்தியிலிருக்கிறான் சாதாரணத் தமிழன்!

பச்சைத்தமிழரோ, வளமிக்க திருநாட்டை அயலார்க்கு காட்டிக் கொடுத்து, சரிதகாலத்திற்கு முன்பிருந்தே பகைவர்களான வடவருக்கு அயலார்க்கு - வால்பிடித்து வணக்கஞ் செய்து - உயிர் வாழ்ந்தால் போதும் என்றிருக்கிறார்!

அவர்மட்டுமா? மாற்றார்க்கு மண்டியிடா மானமறவர் பெருங்குடியில் பிறந்த பலர், இன்று, தன்னை மறந்து தனது பரம்பரையை மறந்து ஈனவாழ்வையே மானவாழ்வு என்று, மாற்றிச் சொல்லிக் கொண்டு திரிகின்றனர்!

ஒருநாட்டு மக்களின் போர்க்குணம் மங்கும்போது, அடிமைவாழ்வும் தொடங்குகிறது. அடிமை வாழ்வு தொடங்கியதுமே, வறுமை முளைத்து வளரத் தொடங்குகிறது. வறுமை மிஞ்சும் போதுதான் உயிராசையும் ஓங்கிநிற்கிறது.

உரிமை உணர்ச்சியே போர்க்குணத்தை உண்டாக்குகிறது! போர்குணத்தால், உரிமை உணர்ச்சி வளர்கிறது! உரிமை உணர்ச்சி மிகுந்தபோது. பேராதிக்க உணர்ச்சியாக மாறுகிறது! பேராதிக்க உணர்ச்சிக்கு வெற்றி கிட்டும் போது, போகபோக்கியம் கிட்டுகிறது! போகபோக்கியம் மாறாமல் நிலைத்து நின்றால், அதுவே போர்க் குணத்தை மழுங்கச் செய்கிறது! போர்க்குணம் மங்கிவிட்டால், பேராதிக்கம் போவதோடு, உரிமையும் பறிபோய் விடுகிறது!

போர்க்குணம் மங்கி உரிமையும் பறிபோன நிலைமையே நீடிக்கும்போது. மனிதன் வீரம் இழந்தவனாக மானமற்றவனாக ஆகிவிடுகிறான்!

உரிமை உணர்ச்சியும். போர்க் குணமும், வளமான வாழ்வும் இருந்தபோது, உயிரைத் துச்சமாக மதிக்கும் வீரம் வளர்கிறது! மானமும். அறிவும், வீரத்திற்கு வலிமை தருகின்றன!

இவைகள் எல்லாம் ஒழிந்து, உரிமையற்ற தாழ்ந்தநிலை வந்து, அதுவே நீடிக்குமானால் - நூற்றுக் கணக்கான ஆண்டுகள் தாழ்ந்தநிலை நீடித்தால் மனிதன் சாதாரண உயிரினங்களைப் போலவே. உயிரும் வயிறும் தவிர வேறொன்றும் முக்கியமில்லை என்று கருதுகிறான்.

'உயிரும் வயிறும்' என்ற எண்ணம் மிஞ்சும் போது. மனிதனுக்கு, சமுதாய உணர்ச்சிகள் தாமாகவே மறைந்து போகின்றன. தனித்தனிச் சுயநலமே தலைதூக்கி நிற்கிறது.

ஒரு சமுதாயம் அல்லது நாடு, தனித்தனி சுயநலக் காரர்களால் நிரம்பும் போதுதான், நாடு அயலார் பிடியில் சிக்குகிறது! காட்டிக் கொடுத்துச் சுய வாழ்வில் வளம் தேடுகிறவர்கள், அயலார் அளிக்கும் கைமாற்றுக்காக. நாட்டை அயலார்க்குக் காட்டிக் கொடுக்கிறார்கள்!

ஆதிக்க வெறியர்கள் இந்தச் சூட்சுமத்தை நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள்!

ஆதலால் அவர்கள், சமுதாயத் துரோகிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, துரோகிகளின் துணையோடு, ஆதிக்கத்தை நிலைப்படுத்தி - வலுப் படுத்தி விடுகிறார்கள்!

சீர்குலைந்த சமுதாய மக்கள், வாழ்வுக்கும், தாழ்வுக்கும், காரணம் காண முடியாமல் சோதிடன், வேதாந்தி ஆகியவர்களின் ஆதிக்கத்தில் அடங்கி, தங்களுக்குள் ஊறிப்போன தனித் தனிச் சுயநல உணர்ச்சிகளால், நாட்டைக் காட்டிக் கொடுத்து நல் வாழ்வு பெறும் துரோகிகளின் தயவுக்காகவும், துரோகிகளை வளர்த்து வரும் ஆதிக்கக்காரர்கள் தயவுக்காகவும் ஏங்குகிறார்கள்!

துரோகிகளின் நல்வாழ்வைக் கண்ட சாமான்யர்கள், துரோகிகளை துரோகிகள் என்று எண்ணுவதில்லை. 'யோகக் காரர்கள்' என்று, எண்ணுகிறார்கள்

—8-ம் பக்கம் பார்க்க—

செந்தமிழ் கொஞ்சும் செஞ்சொற் காப்பியம் சிலப்பதிகாரத்தை அறியாதார் இலர். வளர்ந்து வரும் பகுத்தறிவு இயக்கத்தினர் பகுதி பகுதியாகப் பாமர மக்களிடம் பாராட்டிக் கூறி தம் மனத்தகத்தே சிலம்பொளி பரப்பி வருகின்றனர். அந்த அரிய நூலிற் காணப் பெறும் சுவைகள் எண்ணிலடங்காதவை; ஏட்டில் விரித்துரைக்க அடங்காதவை. எடுதுதுக் கூறியும் இன்னும் உண்டு என்ற அளவிலேயே விரிந்த சுவையினை உடையது சிலம்பு.

இலக்கியத்தின் சுவைகளால் இன்புற்றுவரும் நமக்கு, அதிற் காணப்பெறும் குறிக்கத்தக்க செய்திகளைப் பற்றியும் அறிதல் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் அல்லவா? படித்தின்புறும் உங்களோடு பகுத்தறிய முற்படும் நானும் பயன் பெறுவதற்கு இத்தகைய ஆராய்ச்சிகள் வழி கோலுகின்றன. இன்று நம் ஆராய்ச்சி அரங்கிற் "காதலி" நின்று நிலவுகின்றுள்.

"காதலி" என்றவுடன் பருவம் பெற்றோர் உள்ளூர இன்பமும்- பருவந் துய்த்தோர் பழகிய இன்பமும்-இருந்தும் பயன் பெறமுடியாதோர் துன்பமும் அடைதல் இயல்பு. உலகில் உயிரினமாய் உலவிவரும் யாரும் காதலைக் கண்டு வெருண்டோடியதில்லை. முடி மன்னர் முதல் பிடியாள் வரையில் காதலின் ஆட்சி நேரடியாகவோ-மறை முகமாகவோ கோலோச்சி வரும் அழியாப் பேரரசு ஆகும் அத்தகைய சொல் ("காதலி") சிலப்பதிகார நூலிலும் பலவிடங்களிற் பயின்று வருகிறது. அந்தச் சொல்லின் தோற்றத்தை ஆராயாமல் அதன் பொருளை மட்டுமே எண்ணப் போகிறேம்.

சிலப்பதிகார நூலிற் "காதலி" என்ற சொல், எத்தகைய இயல்புடையோருக்குப் பயின்று வருகிறது? இன்று நாம் சினிமாபதுபோல (Love) காதல் கொண்டு காணும் மங்கையர் எல்லாம் காதலிகள் என்ற கருத்தில் வருகிறதா?

விருப்பம் அற்ற சூழலில் ஒருவரே விரும்பினும் அதனைக் 'காதல்' என்று அழைக்கு நிலையில் வருகிறதா? அல்லாமல் முறைப்படி காதலித்துக் கருத்தொருமித்து மணந்துகொண்டோர் என்ற பொருளிற் 'காதலி' வருகிறதா? என்பதே நம் கருத்திற் கலந்து நிற்பது.

சிலப்பதிகாரத்தின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகும். கி. பி. இரண்டில் தமிழகத்து மக்கள் "காதலி' என்ற சொல்லை எவ்வாறு பயனபடுத்தி, அச்சொல்லிறகுச் சிறந்த பொருளைத் தந்துள்ளனர் என்பதைக் காணபோம். சிலம்பின் தொடக்கம் மங்கல வாழ்த்துப் பாடல் ஆகும். அதிலே கண்ணகியை

"காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி"

—என்று அறிமுகப்படுத்துவது குறிக்கத்தக்கது.

மங்கல வாழ்த்தில் அறிமுகப்படுத்தப்படும் கோவலனையும

"காதலாற், கொண்டேத்துங் கிழமையான் கோவலன்"

—என்றே குறிப்பிடுகிறுர். இதிலிருந்து கண்ணகி-கோவலரிடையே களவு உண்டா? இல்லையா? என்பதை யறிவதைவிட, மணமக்களைக் "காதலர்" என்று அழைப்பதை அறிதல் நன்றும்.

அதே காதையில் பலரறிய மணந்து கொண்ட மணமக்களை வாழ்த்தும் பேறு பெற்றேர்—

"காதலற் பிரியாட
கவவுக்கை நெகிழாதல்"

—என்று வாழ்த்துவதும் குறிக்கத்தக்கது.

8. சிலம்பிற் காதலி.

திருமணம் முடிந்து மனையறம் தொடங்குகிறது. மனையறம்படுத்த காதையில் 11-வது வரி-

"கயமலர்க் கண்ணியும்
காதற் கொழுநனும்"

—என்று பேசுகிறது. இங்கு கண்ணகியும் அவளது காதலனுகிய கோவலனும் என்றே பொருள்படுகிறது.

அடுத்து நாடுகாண் காதையில் கண்ணகி - கோவலன் தொடர்பு காணப்படுகிறது. இடைப்பட்ட சில காதைகளில் நடுவில் தொடர்ந்த நாயகி மாதவி நல்லாள் – கோவலன் செய்திகள் தொடர்கின்றன. அரங்கேற்றுக் காதையில் அறிமுகமாகும் அழகி மாதவியை "தாதவிழ் புரிகுழல் மாதவி" என்று இளங்கோ கூறுகிறுர். கோவலனும் மாதவியும் கொண்ட தொடர்பின் பின்னர் கடலாடுகாதை 173-4, ஆம் வரிகள் இருவரையும் சேர்த்துப்பேசுகின்றன.

"கோவலன் தன்னெடுங்
கொள்கையி னிருந்தான்
மாமலர் நெடுங்கண்
மாதவி தானென்."

இங்குக் காதலர் என்ற சொல் வராமையை நோக்குக. கடலாடு காதையில் 119-20 வரிகள் மாதவி-கோவலன் இருவரது கடற்செலவைக் குறிக்கின்றன.

"வான வண்கையன்
அத்திரி ஏற
மானமர் நோக்கியும்
வைய மேறி."

இங்கும் ஒப்புக்குக்கூட "காதலர்" என்ற சொல் பயன்படுத்தப்பட இல்லையே?

அடுத்துக் கானல்வரியில் மாதவியைக் குறிப்பிட இளங்கோ "மானெடுங்கண் மாதவி" என்பதையே கைக்கொள்கிறுர். கண்ணகி கோவலன் தொடர்பைவிட மாதவி-கோவலன் தொடர்பில் உள்ளத்து ஒற்றுமை - அன்பு - மையல் - உடலுறவு மகப்பேறு இவ்வளவும் இருந்தும் மாதவியை அவளது உருவ அழகு பற்றிய அடைமொழி கொண்டே அழைப்பது ஏன்? இத்தகைய இணைந்த தொடர்புகள் இன்றி திருமணம் செய்துகொண்ட தொடர்பை உடைய கண்ணகியை அழைக்கும்போது "காதலி" என்று அழைப்பதும் ஏன்? கோவலன் - கண்ணகி இருவரை மட்டும் "காதலர்" என்று அழைப்பதற்குக் காரணம் என்ன?

கண்ணகியைக் காதலி என்று ஆறு இடங்களில் இளங்கோ அழைக்கிறுர், கோவலனேடு தொடர்புபடுத்தி. புறஞ்சேரி இறுத்த காதை!

"மாதவத் தாட்டியொடு
காதலி தன்னையோர்."
"காதலி தன்னெடு
கானகம் போந்ததற்கு."

இவை இரண்டும் கோவலனெடு தொடர்புபடுத்தி வருவன. அடுத்து ஊர்காண் காதையில் இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கொண்டு கோவலவழுதியின் மன அமைதியை நாடுகிறுர். அவை திருமணம் செய்துகொண்ட காதலர்களைப் பற்றியவை. இராமனும் சீதையும் திருமணம் செய்துகொண்டு தாதை ஏவலால் காடு சென்றதைக் குறிப்பிகையில்.

"கவுந்தி கூறும்
காதலி தன்னெடு

என்று விரித்துரைக்கிறுர். அடுத்து நளன்-தமயந்தி இருவரும் திருமணம் செய்துகொண்டு, காடுபோக நேர்ந்தமையும் காட்டில் நளன் தமயந்தியை இரவோடு இரவாகப் பிரிந்தமையும் கூறுகிற அடிகள்.

"காதலிற் பிரிந்தோ
னல்லன் காதலி
தீதொடு படூஉம்
சிறுமைய னல்லன்."

என்று குறிப்பிக்கிறுர்.

முறையாக மணந்துகொண்ட மணமக்களையே அடிகள் காதலர், காதலி என்று கூறுவதாகத் தோன்றுகிறது. மேலே காட்டிய இரண்டு செய்திகளும் சிலம்பில் வரும் துணைச் செய்திகளே. அவைகூட "காதலி" என்ற சொல்லை மணந்துகொண்ட மகளைக் குறிக்கவே வந்துள்ளன.

இவை நீங்க, சிலம்பிலேயே கவுந்தி அடிகள் வாய்ப்பட "காதலி" என்று அழைக்கப் பெறுகின்றுள் கண்ணகி. மாடல மறைபவன் உரையால் கவுந்தியடிகள் கோவலனையும்- கண்ணகியையும் மதுரைக்குச் செல்லுமாறு பணிக்கையில், கோவலனிடம்:

"காதலி தன்னெடு
கதிர்செல் வதன்முன்."

மாடமதுரைக்குப் போவாய் என்று கூறுகிறுர்.

கொலைக்களக் காதையில் கோவலன் குற்றுயிராய்க்கிடக்க, கண்ணகி காண்கிறுள். அப்பொழுது ஆவல் மீக்குற்ற கோவலன் அவளை ஆரத் தழுவினன் என்பார் இளங்கோ அடிகள். இங்குகூட கண்ணகியைக் குறிக்கையில்.

"கடுங்கயல் நெடுங்கட்
காதலி தன்னை."

என்றே குறிப்பிடுகிறுர்.

வாழ்த்துக் காதையில் பெண்டிர் கோவலன் கண்ணகியைப் பற்றிப் பாடுகையில் 'காதலி' வருகிறுள்.

"காதலன் தன்வீவுங்
காதலிநீ பட்டதூஉம்."

எஞ்சிய சில இடங்களிற் காதலர் என்ற சொல் பயின்று வருகிறது. துன்பமாலையில் கண்ணகி கோவலனைக் குறிக்கையில்.

"காதலற் காண்கிலேன்
கலங்கிநோய் கைம்மிகும்,"

என்பதும்,

ஊர்சூழ்வரியில் ஊராரறிய உரைக்கும் கண்ணகி.

"காதற் கணவனைக்
காண்பனே ஈதொன்று
காதற் கணவனைக் கண்டால்"

என்பதும்,

அழற்படுகாதையில் காணப்பெறும்

"காதலற் கெடுத்த
நோயொடுளங்கனன்று"

என்பதும்,

குன்றக்குரவையில் பெண்டிர் வாழ்த்தும்போது தம் கணவரைக் குறிக்கையில்.

"கண்டுநம் காதலர்
கைவந்தார் ஆனது"

என்பதும்,

காட்சிக் காதையிற் காணப்பெறும்

"காதலன் துன்பம்
காணுது கழிந்த"

—என்பதும் வரந்தரு காதையிற் காணும்

'புகழ்ந்த காதலன்
போற்ரு ஒழுக்கின்"

—என்பதும் திருமணம் செய்துகொண்ட மணமகனையும்-மணமகளையும் குறிக்கின்றவையே, அன்றிப் பொது மகளிரைக் குறிப்பவையல்ல.

காதலி என்பவள் இளங்கோ அடிகள் கருத்துப்படி திருமணம் புரிந்துகொள்ளப்பட்ட ஒருத்தியையே குறிக்கும் என்பது சிலப்பதிகார நூலிற் காணப் பெறும் உண்மையாகும். கோவலன் காதலி கண்ணகியைத் தவிர மாதவியைக் குறிக்கமுடியாமை குறிப்பிடத்தக்கது இளங்கோ அடிகள் மாதவியையும் அவள் பண்பு நலன்களையும் உயர்ந்த முறையிற் கூறியிருந்தும், கோவலனுக்குப் பல்வகையில் தந்த இன்பங்களை அறிந்திருந்தும் கண்ணகியைமட்டும் கோவலனின் "காதலி" என்று குறிப்பதன் காரணம்; சிலம்பின் காலத்தில் மணந்துகொண்ட மகளே 'காதலி' என்று வழங்கியமையாக இருத்தல் கூடும் என்பது! என் கருத்தாகும்.

அடுத்த கிழமை:
"அவலச் சுவை"

வெண்பாப் போட்டி-7.

★

ஈற்றடி
இல்லற வாழ்வே இனிது

இறுதி நாள் 8-10-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

மல்லிகைப்

23. குணவதியம்மாள் செய்த கலாட்டா.

ஜமீந்தார் தன் கதையைத் தொடர்ந்தார்:—

அந்த நண்பனைத் திடீரென்று சந்தித்ததால் ஏற்பட்ட ஓர் இன்ப அதிர்ச்சியுடன், அவன் கூறிய இந்தச் செய்தியும் என்னைத் திகைப்படையச் செய்தது.

'நண்பா, அதெப்படி நீ எங்கள் மாளிகையை விலைக்கு வாங்க முடியும்?' என்று கேட்டேன்

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவனுடைய முகத்தில் கோபம் கொந்தளித்தது.

"கருணாகரா, இன்னும் என்னை நீ கையாலாகாதவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன் தந்தை தான் என்னை ஏளனமாக மதித்தார் என்றால், உன்னிடமும் அந்தப்போக்கு அப்படியே காணப்படுகிறதே! பெற்றவருக்குப் பிள்ளை என்பதை அப்படியே காட்டுகிறாயே?" என்று கேட்டான்.

"கொஞ்சம் பொறுமையோடு கேள். நீ எவ்வளவு தான் பணம் வைத்திருந்தாலும், உரியவன் விற்க முன்வந்தால் தானே நீ எதையும் வாங்க முடியும். நான் இப்போது என் மாளிகையை விற்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?" என்று கேட்டேன்.

அப்போது தான் அவன் நான் கேட்ட கேள்வியின் பொருளைச் சரியாக உணர்ந்து கொண்டான். பிறகு அவன் என்னிடம் பணிவாகவும் குழைவாகவும் பேச ஆரம்பித்தான்.

"கருணாகரா: நீ என் இளம்பருவத் தோழனல்லவா? என்னுடைய சபதம் நிறைவேற நீ உதவி செய்ய வேண்டியது உன் கடமையல்லவா?" என்று கேட்டான்.

'உண்மைதான். அது என் கடமை தான்! ஆனால், நீ எடுத்துக் கொண்ட சபதம் என் தந்தையாருக்கு எதிரானதாக வல்லவா இருக்கிறது? தந்தையின் தோல்வியை ஒரு தனயன் எப்படிப் பொறுத்துக்கொள்ளமுடியும்?" என்று கேட்டேன் நான்.

அதன் பிறகு அந்த நண்பன் என்னிடம் மாளிகையை விலைக்கு வாங்குவதுபற்றி எதுவுமே கேட்கவில்லை. உடனடியாக என்னிடம் போவதற்காகச் சொல்லிக்கொண்டான். அப்போது நான் அவனை நோக்கி, "நண்பா எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதுதான் சந்திக்கிறோம். இப்படி நீ வந்தவுடன் புறப்பட்டுச் செல்வது சரியா?" என்று கேட்டேன். அவனை என் இல்லத்தில் சில நாட்கள் தங்கிப் போக வேண்டுமென்று வற்புறுத்தினேன். ஆனால், அவன், மிகப் பிடிவாதமாகப் போக வேண்டுமென்று கூறினான். கடைசியில் நான் அவனிடம், "நண்பா, என் மேல் வீண் கோபம் கொள்ளாதே! இருவரும் இருந்து நன்றாகக் கலந்து ஆலோசிப்போம்! அதன் பிறகு மாளிகையை யார் வைத்துக்கொள்வது என்று முடிவு செய்வோம்!" என்று சொன்ன பிறகு தான் அவன் என் மாளிகையில் விருந்தாளியாகத் தங்க ஒப்புக்கொண்டான்.

என் நண்பனிடம் அவன் என்னைப் பிரிந்து சென்ற இடைக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டேன்.

தன் மனைவியின் கொடுமை தாங்க மாட்டாமல், வீட்டை விட்டு ஓடிப் போன என் நண்பன், நேரே சென்னைக்கு வந்து சிங்கப்பூருக்குக் கப்பலேறிவிட்டான். சிங்கப்பூரிலே, வெள்ளைக்காரத்துரை யொருவரிடத்திலே வீட்டுக்குக் காவல் சேவகனாகச் சேர்ந்து தன் வாழ்க்கையைத் தொடங்கினான். நல்ல கல்வியறிவும், எல்லையில்லாத சிந்தனா சக்தியும், இனிய பண்பாடும், உயர்ந்த குணங்களும் உடைய என் நண்பன் அந்த வெள்ளைக்காரத் துரையின் அன்புக்குப் பாத்திரனானான். கடைசியில் அவருடைய கண் காணிப்பிலேயே மெல்ல மெல்ல மேல் நிலைக்கு உயர்ந்த என் அருமை நண்பன் அவருடைய ஆதரவாலும் உதவியாலும் தனக்கென ஒரு கம்பெனியுடையவனாகி விட்டான். தளராத நெஞ்சும் அயராத உழைப்பும் கொண்ட என் நண்பன் தன் கம்பெனியை ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடத்தி மிக விரைவில் பெரும் பணக்காரனாகி விட்டான்.

அந்தப் பணத்தைக் கொண்டுதான் இப்போது என் மாளிகையை வாங்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தான்.

என் நண்பன் வந்து சேர்ந்ததிலிருந்து இரண்டு மூன்று நாட்களாக நாங்கள் இருவரும் மாளிகைபற்றி மறுபடியும் பேசவில்லை. ஆனால், நாங்கள் இருவரும் ஒன்றாகப் பழகத் தொடங்கியதும், எங்களுடைய பழைய நட்பு மறுபடியும் உறுதியாகப் பற்றிக் கொண்டுவிட்டது மீண்டும் உயிர் நண்பர்களாக நாங்கள் தொடர்பு கொள்ளஆரம்பித்துவிட்டதையுணர்ந்து விட்டோம். அதனால், ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்தும் உள்ளம் கலந்தும் பேச ஆரமபித்தோம்.

ஒரு நாள் நான் என் நண்பனிடம், "நண்பா, என் மாளிகை விலைக்கு வேண்டுமென்று கேட்டாயே, அதை வாங்கி என்ன செய்யப் போகிறாய்? உன் மனைவி மக்களுக்குக் கொடுக்கப் போகிறாயா?" என்று கேட்டேன்.

இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே தான் என் நண்பன் சிந்திக்க முற்பட்டான்.

தன் மனைவி மக்கள் எப்படியிருப்பார்களோ. அவர்கள் குணம் எப்படி மாறியிருக்கிறதோ என்று அவன் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அதன் பிறகுதான் தான் மாளிகை வாங்குவது பற்றி முடிவுக்கு வர வேண்டுமெனவும் முடிவுக்கு வந்தான். என் நண்பன் மறைமுகமாகத் தன் குடும்பத்தைப் பற்றி விசாரணைகள் நடத்தியபோது, தன் மனைவியோ, மகனோ தன் அன்பைக் கவரக்கூடிய பண்புடையவர்களாக மாறி வரவில்லை என்பதையறிந்துகொண்டான். அதற்கிடையில் இந்தத் தங்கத்தைப்பற்றி அவன் கேள்விப்பட்டான்.

தங்கம் என்ற ஒரு நல்ல பெண், அன்பும் அறிவும் பண்பும் குணமும் உடைய பெண்ணாக இருந்தும் வறுமையில் வாடும் பெற்றோருக்குப் பாரமாக இருந்து வருவதைக் கேள்விப்பட்ட என் நண்பன், இப்படிப்பட்ட பெண், தன் சொத்துக்களை அனுபவிக்கட்டும் என்று சொல்லி என் கையிலே இந்த உண்டியல் சீட்டைக் கொடுத்து, நீங்கள் உங்கள் மாளிகையை இந்தப் பெண்ணுக்கு விற்பனைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி விட்டான். அதன்படி தான் இப்பொழுது நாம் இந்த மாளிகையைத் தங்கத்துக்குக் கிரயம் செய்து கொடுக்கக் கூடியிருக்கிறோம்" என்று ஜமீந்தார் கூறினார்.

"இல்லை, எல்லாம் பொய்! இது ஜமீந்தாரும் இந்த அண்ணாமலைப் பண்டிதரும் சேர்ந்து போடுகிற நாடகம்! நான் ஏமாளியல்ல! எனக்கு மாளிகையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்!" என்று வெறிபிடித்தவள் போல் கூவினாள் தங்கம்.

"தங்கம், வலியவருகிற சீதேவியை உதைத்துத் தள்ளாதே!" என்றார் அண்ணாமலைப் பண்டிதர்.

அப்போது, "ஜமீந்தார் ஐயா!" என்று ஒரு கரகரத்த பெண் குரல் கேட்டது. எல்லோரும் அந்தக் குரல் வந்த திசையில் திகைப்புடன் திரும்பிப் பார்த்தார்கள். ஏனென்றால் அந்தக் குரல் மிகவும் கடூரமாய் இருந்தது.

'ஜமீந்தாரையா, இப்போது உங்கள் நண்பர் எங்கேயிருக்கிறார்?" என்று சுந்தரேசனின் தாயார் குணவதியம்மாள் கேட்டாள்.

'ஏனம்மா, நீ யார் அதை கேட்க?" என்று ஜமீந்தார் கேட்டார்.

"தொட்டுத் தாலிகட்டிய மனைவியையும், பெற்றெடுத்த பிள்ளையையும் வஞ்சிக்க நினைக்கின்ற அந்த மனுஷன் எங்கேயிருக்கிறார் என்று தான் கேட்கிறேன்." என்றாள் குணவதியம்மாள்.

"அம்மா, நீ யார்?" என்று மறுபடியும் கேட்டார் ஜமீந்தார்.

"நான்தான் உங்கள் கயிலாயத்தின் மனைவி. இதோ இவன் தான் அவர் பெற்ற பிள்ளை" என்று சுந்தரேசனைக் காட்டிச் சொன்னாள் குணவதியம்மாள்.

"உங்களை யாரும் இங்கேயழைக்கவில்லையே?' என்று கேட்டார் ஜமீந்தார்.

"யார் எங்களை அழைக்க வேண்டும்? உரிமையில்லாத இடத்திற்கா நாங்கள் வந்திருக்கிறோம்?" என்று மிடுக்காகவே கேட்டாள் குணவதியம்மாள்.

அவளையும் அவளுடைய பேச்சையும் பார்த்தபோது, அவளை ஒரு பெண் என்று மதிக்கும் படியாக இல்லை ஆனால்' அவளுடைய உருவத்தைக் கண்டவர்கள் அவளிடம் இப்படிப்பட்ட கொடூரமான குணங்கள் இருப்பதைக் கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது.

அவ்வளவு வயதான பின்னாலும். அவளுடைய அழகு நெருங்கு குலையாமல் இருந்தது. அவளுடைய சிவந்த மேனியும், களை பொருந்திய முகமும், அதற்கு மேல் அவள் செய்து கொண்டிருந்த அலங்காரங்களும் சேர்ந்து அவளை, ஒரு சுந்தராங்கினியாக்கிக் காட்டிக் கொண்டிருந்தன. ஆனால், இவ்வளவு மேன்மையான அழகுடைய அந்தப் பெண் மணிக்கு ஏன் இப்படிப்பட்ட கொடூர குணமும் கரகரத்த குரலும் அமைந்தது என்று எண்ணி வியப்படையாமல் இருக்க முடியவில்லை அங்கு கூடியிருந்தவர்களால். அழகு இருக்குமிடத்தே ஆபத்தும் இருக்கும் என்று சான்றோர் சொன்ன வாக்குக்குச் சான்றாக இருந்தாள் குணவதியம்மாள்.

ஜமீந்தார் கருணாகரரிடம் அந்தப் பகுதி மக்கள் யாரும் கைகட்டி தலை வணங்கிப் பேசுவதுதான் வழக்கம். பெண்களோ அவர் எதிரில் நின்று பேசக் கூடத் துணிய மாட்டார்கள். அவ்வளவு மரியாதையாயிருந்தது. இதையெல்லாம் ஜமீந்தார் விரும்பியதில்லை யென்றாலும், பரம்பரை பரம்பரையாக அவருடைய இல்லத்தினருக்கு அப்பகுதி மக்கள் இப்படிப்பட்ட மரியாதைகளைக் காட்டி வந்தார்கள்.

பணிவாகப் பேசுகின்றவர்களையே மிகுதியாகக் கண்டு வந்த ஜமீந்தார் கருணாகரர், குணவதியம்மாளின் கடுகடுப்பான பேச்சைக் கேட்டதும் பிரமித்துப்போனார். "இப்படியும் ஒரு பெண் இருப்பாளா?" என்று திகைப்படைந்தார். கடைசியில் அவளை வாயடக்குவதற்காக, "அம்மா, உன் கணவர் என்று நீ சொல்லுகிற அந்த மனிதர் சென்னையில் இருக்கிறார். ஆகவே, அவரிடம் போய் நீ கூற வேண்டியவற்றைக் கூறிக்கொள்" என்றார்.

"ஜமீந்தாரையா! என்னை ஏமாற்றி விடலாமென்று நீங்கள் எண்ணியிருந்தால் அது நடக்காது. அந்த மனிதர் இங்கே வந்திருக்கிறார் என்று எனக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம். அவர் எந்த உருவத்தில் எந்தப் பெயரில் எங்கே மறைந்திருந்தாலும் நான் கண்டுபிடித்துவிடுவேன்" என்று குணவதியம்மாள் திடமான குரலில் கூறினாள்.

இவள் ஏதோ கலாட்டாச் செய்ய வந்திருக்கிறாள் என்பதைக் கூட்டத்தில் இருந்தவர்கள் புரிந்துகொண்டார்கள்

எவர் மனத்தையும் தன் பேச்சாலேயே மாற்றும் இயல்பு படைத்தவரான அண்ணாமலைப் பண்டிதர், இவளுக்குத்தகுந்த பதிலளித்து, அமைதிப்படுத்தாமல் இருக்கிறாரே என்று எண்ணினார்கள்

அதே சமயம் குணவதியம்மாளும் அண்ணாமலைப் பண்டிதரை உறுத்துப் பார்த்தாள்.

கடுமையான அவளுடைய பார்வையைக் கண்டு அண்ணாமலைப் பண்டிதர்

நாரா நாச்சியப்பன்.

பந்தல்

எவ்விதமான கவலையும் அடைய வில்லை.

"குணவதி, பேசாமல் உட்கார்!" என்று மிக உரிமையுள்ளவர்போல் அதட்டலான குரலில் கூறினர். பிறகு அவர் கூடியிருந்த விருந்தினர்களை நோக்கி, "அன்பர்களே, ஒரு காரியம் நடைபெறும்பொழுது அதைக் கெடுப்ப தற்கென்றே வந்ததுபோல் இவள் இடையிட்டுப் பேசியதை நீங்கள் கண்டீர்கள். ஆனுல், இவள் பேரில் குற்றமோ, தவருே இருப்பதாக எனக்குப் படவில்லை-ஆனுல், இவளு டைய பெயருக்கேற்ற குணம் இல்லாத தால் வந்ததுதான் இவ்வளவும்!" என்ருர்.

இதைக் கேட்டதும் குணவதியம் மாள், சுந்தரேசன் பக்கம் திரும்பி, "பாரடா! உன் அம்மாளைப் பற்றிப் பேசுவதைப் பார்த்துக்கொண்டிருக் கிருயே!" என்று சொல்லிப் புலம்பி அழத்தொடங்கி விட்டாள்.

"கொஞ்சம் பொறு அம்மா! என்ன தான் நடக்கிறதென்று பார்க்கலாம்!" என்று அருவருப்பான குரலில் கூறி அவளை அடக்கினுன் சுந்தரேசன். அவன் பார்வை முழுவதும் தங்கத்தின் மேலேயே பதிந்திருந்தது. அவனுடைய சிந்தனையில் ஏதேதோ திட்டங்கள் உரு வாகிக் கொண்டிருந்தன.

அண்ணுமலைப் பண்டிதர் தொடர்ந்து பேசினுர்.

அன்பர்களே! ஜமீந்தார் கருணுகரர் அவர்கள் தம் நண்பரைப் பற்றிக் கூறிய கதையைக் கேட்டீர்கள். அந்த நண்பர், தம்முடைய மனைவி மக்களின் கொடுமை தாங்க மாட்டாமல்தான் வீட்டை விட்டு ஓடினுர் என்று சொன் ஞர். இந்தக் குணவதியோதான் தான் மனைவியென்று உரிமை கொண் டாடுகிருள். இவள் எப்படிப்பட்ட வள் என்பதையும் நீங்கள் ஓரளவு தெரிந்துகொண்டீர்கள். இப்படிப்பட்ட வளோடு அவர் எப்படி வாழ முடியும்? இப்படிப் பட்டவளுக்கு அவர் எப்படித் தன் சொத்தைக் கொடுக்க நினைப்பார். மேலும், அவர் தான் பெற்றெடுத்த மகனுககாவது ஏதாவது கொடுக்க லாமாவென்று யோசித்தார், ஆனுல், முதாதையர் வழியாக அவருக்குக் கிடைத்த-தன் மனைவியின் பொறுப்பில் இருந்த ஏராளமான செல்வங்களை யெல்லாம் கரைத்தவன் இந்த மகன் என்று தெரிந்து கொண்ட பின்னுல், அவனுக்கு இவர் எப்படித் தன் சொத் தைக் கொடுக்க முன் வருவார். தன் தந்தையைத் தந்தையென்று தெரிந்து கொண்ட பின்னுலும் அவரிடம் அன்போ, மரியாதையோ பேருக்குக் கூடக் காட்டாதவனுக்கு அவர் ஏன் தன் சொத்தைக் கொடுக்க வேண்டும் என்கிறேன்? என்று கேட்டார் அண்ணு மலைப் பண்டிதர்.

இதைக் கேட்டதும் சுந்தரேசன் ஆவேசத்தோடு எழுந்து, "எங்கள் உரிமையை நிலைநாட்ட வந்தோமே தவிர உங்கள் சொத்துக்காக இங்கே யாரும் ஓடி வரவில்லை. பெரிய சொத்துச் சேர்த்துவிட்டாராம் சொத்து. எல்லாம் நான் கோர்ட்டு முலமாகப் பார்த்துக்கொள்கிறேன். வா, அம்மா போகலாம்!" என்று தன் தயாரான குணவதியம்மாளின் கையைக் கரகர வென்று இழுத்துக்கொண்டு வெளி யேறினுன் சுந்தரேசன். குணவதி யம்மாளோ, அங்கிருந்து போகப் பிரியமில்லாதவளாயிருந்த போதிலும், தன் மகன் கோர்ட்டு மூலம் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிய தைரிய மொழிகளைக் கேட்டு "சரி, பிறகு பார்த்துக்கொள்வோம்" என்ற எண் ணத்துடன் அவனைத் தொடர்ந்து போனுள்.

"போடா, போ! என் சொத்தில் உனக்கு ஒரு காலணுக் கூடக் கிடைக் காது! இது உன் பாட்டன் சம்பா தித்த சொத்தா யிருந்தால்தான் கோர்ட்டு மூலம் பெறலாம். அத்தனை யும் நான் தானுகப் பாடுபட்டுச் சம்பா தித்த சொத்து" என்று உறுமினுர் அண்ணுமலைப் பண்டிதர், அவர் கண் கள் கொவ்வைப் பழம் போல் சிவந்து விட்டன.

ஆத்திரத்தில் அவர் தாம் இவ்வளவு நேரமும் மறைத்து வைத்துப் பேசி வந்ததை மறந்துவிட்டார். தான்தான் அவன் தந்தையென்பதைக் காட்டிக் கொண்டுவிட்டார். இதை அவர் உணர வில்லை. ஆனுல், மரகதம்மாள். "அண்ணு, நீங்கள் தானு?" என்று ஓடி வந்து அவரைக் கட்டியணைத்துக் கொண்டதைக் கண்ட பிறகுதான் அவர் தன் தவற்றை யுணர்ந்தார்.

அண்ணுமலைப் பண்டிதர் தான் சித்திர நல்லூர் கயிலாயமா என்று அங்கு கூடியிருந்தவர் அனைவரும் வியப்படைந்தார்கள். அவர் தன் மாமன் என்பதையறிந்த தங்கம் அடைந்த வியப்புக்கு அளவேயில்லை. கந்தசாமி வாத்தியார், தாம் இவ்வளவு பழகியும் தம்மைத்துனரை இன்னுர் என்று தெரிந்து கொள்ள வில்லையே வருந்தினுர். அதேசமயம், தன் அன் புக்கும் மரியாதைக்கும் மட்டுமல்லாமல் உறவுக்கும் உரியவராக அவர் இருப் பதை அறிந்ததால் ஆனந்த பரவசத் தில் மூழ்கினுர்.

பிறகு அண்ணுமலைப் பண்டிதர் அங்கு கூடியிருந்தவர்களுக்குத் தன்னைப பற்றி விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

நண்பர்களே! சிங்கப்பூருக்கு நான் சென்று வந்த கதையை ஜமீந்தார் அவர்கள் கூறினுர்கள். நான் சிங்கப் பூரிலேயே தான் இருந்துவிட எண்ணி னேன். ஆனுல், பெரிய ஜமீந்தாரிடம் செய்த சபதத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உறுத்தல் என் நெஞ் சில் இருந்து கொண்டிருந்தது. அதற் காகவேதான் இந்த நாட்டுக்குப் புறப் பட்டு வந்தேன். ஆனுல், என் தோழர் கருணுகரர் கேட்ட கேள்வி தான் என்னை இவ்வாறு மாறு பெய ரில் உலவச் செய்தது? "தன்னந்தனியாளான உனக்கு ஏன் இத்தனை பெரிய மாளிகை?" என்று கேட்டார். அத் துடன், 'உன் மனைவி மக்களுடன் திரும்பவும் சேர்ந்து வாழ எண்ண மிருக்கிறதா?" என்றும் கேட்டார்.

நான் யோசித்தேன்.

அவர்கள் திருந்தியிருந்தால், ஏன் அவர்களுடன் கூடிவாழக் கூடாது? என்று. ஆனுல். அதையறிந்து கொள்ள நான் மறைமுகமாக வாழ்வ தென்று முடிவு செய்தேன். மறைமுக மான வாழ்க்கையிலிருந்து நான் அவர் களைப் பற்றித் தெரிந்து கொண்ட விஷயங்கள் என் மனத்துக்குத் திருப்தி யளிக்க வில்லை. அதே சமயம் நான் என் தங்கை வீட்டைப் பற்றிக் கேள் விப் பட்டபோது அவர்கள் பெரும் வறுமையில் வாடுவதாக அறிந்தேன் நல்லவர்களான அவர்களுக்கு என் சொத்தை யளித்து நலமாக வாழச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

ஜமீந்தார் அவர்களிடம் நான் அவர் களைப் பற்றிப் பேச்சு எடுத்தபோது, தங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவர்களும், ஜமீந்தாரிணியம்மாளும், தங்கத்தைப் பார்க்க விரும்பினுர்கள். பிள்ளை குட்டியில்லாத ஜமீந்தார் அவர் கள், தங்கத்தை நேரில் சந்தித்து அவளுடைய குண நலன்களை யறிந்து கொண்ட பின், தங்கத்திற்குத் தன் மாளிகையைச் சும்மா கொடுக்கவே தயாராயிருப்பதாகக் கூறினுர். ஆனுல், நான் விலைக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதன்படிதான் இந்த ஏற்பாட்டைச் செய்து முடித்தோம்.

"தங்கம், உன் மாமனுடைய அன் பளிப்பாக இந்த மாளிகையை ஏற்றுக் கொள்ளச் சம்மதந்தானே?" என்று கேட்டார், அண்ணுமலைப் பண்டிதர்.

தங்கம் வெட்கத்தோடு தலைகுனிந்து பேசாமலிருந்தாள்.

"அண்ணு, ஜமீந்தாரையா காலத் திற்குப் பிறகு வேண்டுமானுல், இந்த மாளிகையை வாங்கிக்கொள்ளலாமே இப்போது வேண்டாம்." என்று மெது வாகக் கூறினுள் மரகத அம்மாள்.

இது ஜமீந்தார் கருணுகரர் காதில் விழுந்து விட்டது. "மரகதம், நான் பரம்பரையாக இருந்து வந்த மாளி கையை விட்டு வெளியேற்றப் படக் கூடாதென்று சொல்லுகிருள் போலிருக் கிறது! அதைப் பற்றிக் கவலையில்லை. உள்ளபடியே நான் இந்த மாளிகையை விற்றுவிட்டு ஒரு தொழிற்சாலை ஏற் படுத்த வேண்டுமென்றுதான் திட்ட மிட்டுக்கொண்டிருந்தேன். அதற்குத் தோதாகக் கயிலாயமும் வந்த சேர்ந் தான்!" என்று சொல்லி மரகத அம்மாளுடைய மனச் சஞ்சலத்தைத் தீர்த்துவைத்தார் ஜமீந்தார்.

பிறகு அவர்கள் ஊர்ப் பெரியவர் கள், அம்பலகாரர் இன்ஸ்பெக்டர், வழக்கறிஞர் ஆகியோர் முன்னிலையில் தங்கத்தின் பெயருக்கு அந்த மாளி கையைக் கிரயம் செய்து கொடுத்து, கிரயப் பத்திரத்தை நீதி மன்றத்தில் பதிவு செய்து கொடுக்கும்படி வழக் கறிஞரிடம் கொடுத்தார்கள்.

விருந்தினர்கள் எல்லோரும் மாலைச் சிற்றுண்டிக்குப் பின் விடை பெற்றுக் கொண்டு தத்தம் வீடுசென்ருர்கள். ஜமீந்தார் மாளிகையில் நடந்த அதிசய நிகழ்ச்சி பற்றியே அந்த வாரம் முழுவ தும் ஊரெங்கும் பேச்சாயிருந்தது.

மாலையில், தங்கமும் ராதாவும் மாளி கையைச் சுற்றிலுமுள்ள தோட்டப் புறத்திற்குச் சென்ருர்கள்.

இருவரும் போய்ப் புல் தரையில் உட்கார்ந்த பிறகு தங்கம் ராதாவை நோக்கிக் கேட்டாள்.

"ராதா! எல்லாம் ஒரு கனவு போல் இல்லையா?"

ராதா பதிலளித்தாள்.

"ஆம்! தங்கம்! என்னுல் இப்போது நடந்த நிகழ்ச்சிகளையே நம்ப முடிய வில்லை. யாரோ ஒரு பண்டாரம் போல் இருந்த பண்டிதர் இப்படித் திடீரென்று பணக்காரரானுர் என்ற செய்தி எனக்கு நம்பமுடியாததாகத் தோன்றுகிறது. அவர் சிங்கப்பூருக்குப் போய் வந்த தாக எனக்குத் தோன்றவில்லை!"

"அப்படியானுல்...?"

"அவர் உன் மாமனுக இருக்கக் கூடும் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனுல், அவரே சம்பாதித்ததாக இந்தப் பொருள் இருக்குமா என்பது தான் என் சந்தேகம். ஜமீந்தார் தான் அவர்மேல் உள்ள அன்பு காரணமாக இந்தமாளிகையைச் சும்மாவே கொடுத் துவிட்டார் என்று நான் நினைக்கிறேன்" என்ருள் ராதா.

"ராதா எல்லாம் எனக்கு ஒரே குழப் பமாயிருக்கிறது! எது பொய் எது உண்மை என்று என்னுல் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த அண்ணுமலைப் பண்டிதர் என்னிடம் அன்பாக நடந்து கொள்ளவில்லை என்பதை நான் கண்டி ருக்கிறேன். ஆனுல், அவர் உள்ளத் தில் அன்பிருந்ததா இல்லையா என்று நான் எப்படித் தெரிந்திருக்க முடியும். ஜமீந்தாரும் ஜமீந்தாரிணியம்மாளும் காட்டிய அன்பை யெல்லாம் நினைத்துப் பார்த்தால், அப்போது அவை போலி அன்பு போலத் தான் தோன்றின. ஆனுல். இன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால், அது உண்மையான அன் பாக இருக்க வேண்டும் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. எல்லாம் போகட்டும், சுந்தரேச அத்தானுக்கு இப்படி ஒரு தாயார் வாய்த்திருக்க வேண்டாம்!" என்ருள் தங்கம்.

"அப்படி ஒரு மனைவியும் வாய்த் திருக்க வேண்டாம்" என்று தொடர்ந் தாள் ராதா.

"சுந்தரேச அத்தான் நல்லவர்தான். அவருடைய தாயாரும் மனைவியும் தான் அவரைக் கெட்டவராக்கி விட்டார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது." என்ருள் தங்கம்.

"ஒவ்வொரு பெண்ணுக்கும் தன் விருப்பத்தைக் கவர்ந்தவர் நல்லவ ராகத்தான் தோற்றமளிப்பார்!" என்று ராதா சொன்னுள்.

"ராதா, கேலியா செய்கிருய்,?" என்று கேட்டாள் தங்கம்.

"இல்லை, உண்மையாகத்தான் சொல்கிறேன். அந்த சுந்தரேசனைப் பார்த்ததிலிருந்தே எனக்குப் பிடிக்க வில்லை. ஆள் என்னவோ அழகாக இருக்கிருரே தவிர, கொஞ்சங்கூடப் பண்பில்லை. பெண்களை வசப்படுத்தப் படித்திருக்கிருரே தவிரப் பெரியோர்கள் முன்னிலையில் பணிவாக நடக்கவே பழகவில்லை. அவர் இதயத்தில் அன் புக்கு இடமில்லை என்பது நன்ருகத் தெரிகிறது. பணம் பணம் செலவுக் குப் பணம்! இதே குறிக்கோளாகத் தான் இருப்பார் போலிருக்கிறது. அவர் உங்கள் வீட்டிற்கு வந்திருந்தது கூட அந்த அண்ணுமலைப் பண்டிதரை உளவறிவதற்காகத்தான் இருக்கும். அண்ணுமலைப் பண்டிதர்தான் தன் தந்தை கயிலாயமாக இருக்கவேண் டும் என்று சந்தேகப்பட்டு அவரை நோட்டம் பார்க்கவே அவர் அங்கு வந் திருக்கவேண்டுமென்றே எனக்குத் தோன்றுகிறது! தங்கம், நீ அவரை மறந்துவிடுவதுதான் நல்லது!" என்று சொன்னுள் ராதா.

"ராதா, உண்மையாகத்தான் பேசு கிருயா?" அவர் நல்லவரில்லையா?" என்று திகிலோடு கேட்டாள் தங்கம்.

— தொடரும் —

அரசியல் அரங்கம்

"வம்பன்" பதிலளிக்கிறார்

[அரசியல் அரங்கத்தில் அரசியல் குறித்த கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் அஞ்சலட்டைகளை அனுப்ப வேண்டுகிறோம். உயர்திரு வம்பன், அரசியல் அரங்கம், தென்றல், சென்னை-6.]

இந்தி போய்விட்டது என்று அண்ணா சொல்வதாகவும் இந்தி இருக்கிறது என்று ஆதித்தனார் சொல்வதாகவும் தந்தி கூறுகிறதே? எது சரி?

—எஸ். எஸ். ஏகாம்பரம், சென்னை-4.

"தந்தி"க்கு முன்னால் 'வ' ஒன்று சேர்த்துக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்.

★

தி. மு. கழகத்தினர் கதர் கட்டலாமா?

—மா. நாராயணன், ஆவடி.

கழகத்தின் சட்டபூர்வமான தடை ஒன்றும் இல்லை. ஆனால் அவசியமும் இல்லை. காரணம்: கள்ளநோட்டு, கள்ளமார்க்கட்டு முதலிய எதுவும் இல்லாததால்!

★

சிவஞானம் சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைக்க ஒரு போராட்டம் நடத்தப்போகிறாராமே? அது எப்படி இருக்கும்?

—இன்பதாசன், கீரனூர்.

வேங்கடத்தில் ஒருகாலும் இமயத்தில் ஒருகாலுமாக இருப்பார். கால்கள் இவ்வளவு விரிந்தால் என்ன ஆவார் என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.

★

கவிஞர்கள் தியாகிகள் உருவத்தை அஞ்சல் தலையில் போடுவதால் அவர்களைச் சிறப்பிப்பதாக ஆகுமா?

—நா. சரசுவதி, உறையூர்.

அஞ்சல் தலை போடுகிறவர்கள் இதன்மூலம் தங்களைச் சிறப்பித்துக் கொள்கிறார்கள்! அவ்வளவுதான்!

★

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று ஏன் சொல்கின்றார்கள்?

—எஸ். குருசாமி, சிதப்பரம்.

வயது வந்தவனுக்கே திருமணம் செய்வது நல்லது.

தி. மு. க பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டு அகில இந்திய அடிப்படையைக் கொண்டு இயங்கினால் என்ன?

—வீ. தம்பித்துரை, விருத்தாசலம்.

கண்களைப் பிடுங்கிக்கொண்டு சினிமாவுக்குப் போகலாமா?

★

மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் தமிழகத்திற்கு இருப்புப் பாதை கிடையாதென்று டில்லி கைவிரித்து விட்டதே காமராஜர் என்ன செய்யப் போகிறார்?

—மேனகா, தி.நகர் சென்னை-17.

டில்லியின் படுபாதகத்திற்குத் திரை போடுவார்!

★

இப்போது நடக்கும் ஐ நா. கூட்டத்தில் நேருவின் முக்கியத்துவம் என்ன?

—பி மோகனதாஸ், கோவில்பட்டி.

உலகக் கணவனுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தி டாலர்தேவி. இன்னொருத்தி ரூபிள்தேவி. இருவருக்கும் இப்போது சக்களத்திப் போராட்டம். இவர்களுடைய ஆதிக்கவெறிக் குழந்தைகளுக்கு ஆசனம் கழுவிவிடக்கூட நேரமில்லை. அந்தப் பொறுப்பை நேரு ஏற்றிருக்கிறார்.

★

அமைச்சர் சுப்பராயனுக்கு ஆங்கில வெறியென்று ம. பொ. சி. கூறுகிறாரே? இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

—டி. சோழன், கோவை.

ம. பொ. சி.யின் அறியாமை வெறியாக இருக்கலாம்.

★

ஆச்சாரியாருடைய சுதந்திராக் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

—என். கருணாகரன், திருவள்ளூர்.

பெயரளவில் இரண்டு செயலளவில் ஒன்று.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

"அந்தயோகம் நமக்கு வராதா" என்று, ஏங்குகிறார்கள். அந்த யோக ஏக்கத்திலுல், துரோகிகளிடம் அடிமைகளைப் போல நடந்து கொள்கிறார்கள், சாமானியர்கள்!

இப்படியே பல நாடுகள் உருப்படாமல் நாசம் ஆகியதை சரித்திரம் சாற்றுகிறது; அனுபவம் அறிவுறுத்துகிறது.

தமிழர்களின் போர்க்குண இயல்புக்கு அடிக்கிழங்குகளாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் இருக்கின்றன. அந்தக் கிழங்குகள் உயிர்ப்புடன் இருப்பினும், நீண்டகாலமாகத் தழைய வில்லை-தழைக்க விடவில்லை!

அந்தக் கிழங்குகள் தழைத்துப் பூத்துக் காய்ப்பதற்கு வழிவகை காண வேண்டும். அதுவே, தக்கார் செயல்! தலையாய கடன்!

அந்த இலக்கியங்களின் பெருமையை இன்றைய உணர்விழந்த தமிழன் உணராதிருக்கலாம். உணரும் காலம் வரும்; அப்போது, அவனுடைய முன்னோர்கள் எத்தகைய அழியாத செல்வத்தைத் தனக்கு வைத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கூத்தாடுவான்!

மண்டையிடி

ஸ்நான பஸ்பம்

எந்த மருந்தினாலும் தீராத மண்டையிடி, ஒத்தைத் தலைவலி, இரட்டைத் தலைவலி, மண்டை குத்தல், குடைச்சல், முதலான மண்டை சம்பந்தமான வியாதிகளுக்கு மிகச் சிறந்த ஸ்நான பஸ்பம்.

5 வேளை மருந்து ரூ. 4-00

தேவைக்கு எழுதவும்.

சப்பு இண்டஸ்டரீஸ், சேலம்-2.

அழகழகாய் வெளிவந்திருக்கிறது

அக்டோபர் முல்லை

அன்னையர் நாடே!

ஆசிரியர் கண்ணதாசன் எழுதிய உணர்ச்சியூட்டும் புதிய கவிதை.

கரேட்டு

நாரா நாச்சியப்பன் எழுதிய சின்னஞ்சிறு நாடகம். திகைக்க வைக்கும்!—அதேசமயம் சிரிக்கவும் வைக்கும்!

அதிசயித்தாளே!

அருப்புக் கோட்டைக் கவிஞர் எம். எஸ். இராமசாமியின் சிரிப்பூட்டும் சிங்காரக் கவிதை.

நடிகை நளினி

மு. கணபதி எழுதிய உள்ளத்தைத் தொடும் நீளக் கதை.

நிர்வாண யோகிகள்

பிரெஞ்சு நாட்டு உலகப் பேரறிஞர் வால்டேர் எழுதிய கிண்டலும் நகைச்சுவையும் கலந்த சிறு கதை.

பொறுமையின் குன்றம்

அமெரிக்க நாட்டுத் தந்தை அப்ரகாம் லிங்கனின் சொந்த வாழ்வில் நடந்த சோகக் கதை. நாகநாதன் எழுதுகிறார்.

இன்னும் பல

இத்தனைக்கும் விலை இருபத்தைந்து காசுகளே!

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை

விவரங்கட்கு

முல்லை சென்னை-6.

18-9-60 ஞாயிற்றுக்கிழமையன்று வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் சென்னை உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு கே வீராசாமி அவர்கள் தலைமையில் திருவள்ளுவன் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பெற்றது. சென்னை மாநிலத்தின் சட்டமன்றத் தலைவர் உயர்திரு. டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் அவர்கள் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். கல்வித் துறையைச் சேர்ந்த டெபுடி டைரக்டர்களும் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், காஞ்சிபுரம் செங்கற்பட்டு, சென்னை முதலிய இடங்களைச் சேர்ந்த பெருமக்களும் வந்து விழாவிற் கலந்து கொண்டார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் ந. சஞ்சீவி, எம். ஏ. அவர்கள் பாடசாலையின் சார்பில் வரவேற்பு வாசித்தளித்தனர்.

பின்பு, தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பூ ஆலாலசுந்தரம், எம். ஏ. அவர்களும், சென்னை நகராட்சி மன்றத்தின் முன்னாள் துணை மேயர் உயர்திரு. பார்த்தசாரதி அவர்களும் வள்ளுவனைப் பற்றியும் வள்ளுவன் குண நலங்களைப் பற்றியும் பாராட்டிப் பேசினார்கள்.

பாடசாலைச் செயலாளர் திரு வா. தி. மாசிலாமணி முதலியார் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது.

இந்தியக் கோட்டை இடிந்துவிட்டது!

கூடலரசன்

அலறித் துடிக்கும் அமைச்சர்கள்

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சியப்பயணத்தில் பதினோர் ஆண்டுகளை முடித்துவிட்டது. பனிரெண்டாவது ஆண்டுத் துவக்க விழாவினைத் திராவிடமெங்கும் உள்ள கழகக்கிளையினை மாற்றார் தம் இதயங்கவர்ந்திடும் வகையில் சிறப்புறக் களிப்புறும் வகையில் நடத்திக்கொண்டுள்ளனர். கழகத்தின் கடந்த காலச் செயல்முறைகளையும் இனி எதிர்காலத்தில் செயல்படுத்த வேண்டிய கொள்கைகளின் எண்ணிக்கையையும் தொகையாக எதிர்நிறுத்தி உறுதி எடுக்கும் நாளாக விடுதலை விரும்பும் இந்த விழாநாள் அமைந்திருக்கிறது. கழகத்தின் இலட்சிய விளக்கத்தினை இன்றளவும் ஏற்றுக்கொள்ளாத ஏமாளிகளும் எத்தர்களும் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். அதனாலேதான் கழகத்தின் கொள்கைகளையும் நெறிமுறைகளையும் அவை உருவாக்கி நிலைநாட்டியுள்ள உயர்ந்த கருத்துக்களையும் மறுத்துரைக்காமல் கழகப் பணியில் உழைத்துக்கொண்டிருக்கும் தோழர்கள் பலரையும் பலியிடவும் பழிவாங்கவும் சதிசெய்து முயல்கின்றனர். மிகக் குறுகிய காலத்தில் ஆரோக்கியசாமியைக் கொன்றார்கள், இராமலிங்கத்தை அடித்துப் பிணமாக்கினார்கள். கழக நிகழ்ச்சிகளில் கல்லெறிவதும் கத்தியாலே குத்துவதும் காந்தீய வாதிகளின் கட்சிக் கடமையாகிவிட்டது கழகத்தின் வளர்ச்சியும் நாட்டவர் இதயத்திலே நாம் பெற்றுள்ள முதலிடமும் எதிரிகளின் எண்ணத்தைக் குழப்புவதிலே வியப்பில்லை! எதையெதையோ சொல்லியும் கழகத்தின் அரசியல் எழுச்சியைக் குறைத்துவிட எதிர் முகாமிலே ஆதாரங்கள அகப்படவில்லை! அமைச்சர்களும் அலறித் துடிக்கிறார்கள். அவர்களை அண்டிப் பிழைக்கும் அபலைகளும் தங்களின் வெறித்தன்மையை வெளியிலே அறிவிக்கிறார்கள். கழகத்தின் சாயல் படிந்திடும் எந்த நிகழ்ச்சியும் தமிழகத்தை அதன் தாயகமான திராவிடத்தை வாழ்விக்கும் வகை உயர்த்தும் சிறப்பாக அமைந்திடுவதால் எந்தத் துறையிலும் கழகத்தவரைப் பின்தள்ளிவிட அவர்களாலே முடிவதில்லை! மக்கள் மன்றத்திலே மதிப்பிழந்து விட்டவர்கள்தான் ஆட்சிப்பீடத்திலே ஒட்டிக்கொண்டார்கள் அதிகாரபபிடியிலே தங்களை ஒப்படைத்துவிட்டார்கள்!

எல்லாக் கட்சிகளுக்கும் வடநாட்டுக் கடிவாளம்!

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கை கோட்பாடுகளைச் சொல்வதில் தாங்கிக்கொண்ட தொல்லைகளின் பட்டியலைக் காட்டுவது தேவையென்று என்னாலே நம்ப முடியவில்லை. கழகத்தின் அரசியல் தத்துவத்தைப் புரிந்துகொண்டவர்களுக்கும் அதன் உள்ளார்ந்த தத்துவமும் உயர்வான பெருமையும் எளிதில் அவர்களது எண்ணங்களில் இடம் பெறுவதைப் பல்வேறு வகைகளிலே கண்டுவிட்டோம்! துணைக் கண்டத்தின் அரசியலில் அபாய அறிகுறியாக இருக்கும் கழகம் தன்னுடைய பரந்து விரிந்த கொள்கையின் ஒவ்வோர அசைவினையும் தென்னகத்தின் நல்வாழ்வுக்காகவே அமைத்துக்கொண்டுள்ளது இதனைக் கழகம் துவக்கப்பட்ட காலத்திலேயிருந்து இன்றுவரை, மற்ற அரசியல் கட்சிகளுடன் ஒடபிட்டுக் கணக்கிட்டு முடிவெடுத்தால் மிக எளிதில் உணர்ந்துகொள்ளலாம். இங்குள்ள ஏனைய கட்சிகள் எல்லாம் கழகத்தின் இலட்சியத்திற்கு முரண்பட்டவை! எல்லாவற்றிலும் வட நாட்டுக் கடிவாளம் மாட்டப்பட்டுள்ளது. அவைகளுடைய அரசியல் எண்ண உரிமைகள் அத்தனையும் அங்கே இழுத்துக் கட்டப்பட்டுள்ள காரணத்தால்தான் இங்கேயுள்ள தாயக நலனைப்பற்றிச் சுயமாகத் தன் நினைவுடன் பேசுகின்ற வாய்ப்பினை இழந்துவிட்டன. வடநாடு தென்னாடு என்ற வரலாற்று உண்மைகளைச் சொல்லி வாதாடுகின்ற நம்மிடத்திலே பகைத்துக்கொள்ள வேண்டிய தேவையற்ற தன்மையை அவைகளின் வடநாட்டுத்தலைமையினர் தந்துவிட்டனர். தாயகத்தின் புகழ் காக்கப்பட வேண்டுமென்றால் அகில இந்தியத் தொடர்பினைச் சொல்லாத மாற்றுக் கட்சியினர் எவரையும் நம்மாலே காணமுடியவில்லை! பாரதப் பெருமையிலே அறிவுக்குப் பொருந்தாத மறுமொழிகளைத் தருகின்றவர்கள் நமக்குத் தெரிவிக்கின்ற சமாதான ஆய்வுரைகளையும் சான்றுகளையும் வடநாட்டிலே வளர்ந்துவிட்ட சொந்த நாட்டுப் பிரியர்களுக்குச் சொல்ல முடிவதில்லை. தென்னக விடுதலையை விரும்பாதவர்கள்கூட வடபுலத்துத் தேவையான சொந்தநாட்டு இன, மொழி உரிமைகளைத் தேடிப் பெறத் துடிக்கிறார்கள்.

உலக போதகாசிரியர் ஊமையானார்!

திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகத்தின் விடுதலை வாழ்வினைப் பெற்றுத் தீர்வதற்கு எல்லா வகையான முயற்சிகளையும் செய்தாக வேண்டுமென்ற உறுதியினை இன்றைய விழா நாளிலே பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நம்பிக்கைக்குச் சான்றுகளாகத் துணைக்கண்டத்தின் பல நிகழ்ச்சிகள் பங்கு பெறுகின்றன. அவைகளின் பட்டியல் சிறிதாக இருந்தாலும் நாம் எண்ணி மகிழத்தக்கப் பண்புகள் நிறைய உள்ளன அந்தப் பண்புகளை நம்மைப் பார்க்கின்ற நேரத்தில் விழிகளைத் பழுதாக்கிக்கொள்ளும் பரிதாபத்துக்குரிய பாரதப் பிரியர்களுக்குச் சொல்லித் தீருவோம்! அதன் வாயிலாக ஏகஇந்தியப் பிடியிலே அடைபட்டிருக்கும் அவர்களது இதயக் கதவுகளை விடுதலை வேண்டி நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பால் இணைத்துக்கொள்ள முயல்வோம்! வடநாட்டின் தனிப் பிரச்னைகள் பல இருந்தாலும் சீக்கிய மக்களின் இனப்பற்றும் மொழியார்வமும் குறைத்து மதிக்கத்தக்கன அல்ல. தங்களது இலட்சிய உரிமைகளைக் காத்துக் கொள்வதற்காக அவர்கள் இரத்த வெள்ளத்திலே மிதந்துவிட்டார்கள்! தங்களுடைய தலைவரைச் சிறைக்குள்ளே தள்ளிவிட்டவர்களின் தடைகளை உடைத்துக் காட்டி உரிமைக் கொடியினை உயர்த்திப் பிடிப்பதிலே, அடிமைப் பட்டுள்ள தென்னவருக்குச் சிறந்த வழிகாட்டியிருக்கிறார்கள்! உலகத்துப் போதகாசிரியர் நேரு இந்தச் செய்தியிலே ஊமையாக இருக்கிறார். உரிமைகளைப் பற்றிப் பேசும்போதெல்லாம் வேகமாகச் சுழலும் அவருடைய நீண்ட நாக்குக்கூட அசைய மறுத்துவிட்டது. சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறைந்திடுமோ என்ற பொன்மொழிக்குச் சான்றாகத் திகழ்கிறார் தாராசிங் அவருடைய தலைமைக்கும் ஆணைக்கும் தங்களைக் கட்டுப் படுத்திக்கொண்டுள்ள அகாலி தளத்தவா அகில இந்தியப் போலித் தத்துவத்தைப் பலையாகத் தொலைத்துவிட்டார்கள்!

இங்கே எதிர்ப்பு-அங்கே ஆதரவு!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்தியப் பண்பாட்டையும் பாரதப் பெருமையையும் சொல்லிக் காட்டுகின்ற காங்கிரசுக்காரர்கள் சீக்கியர்களைப் பிடித்து அடித்துச் சாவுக் குகையினுள்ளே தள்ளுகிறார்கள், இங்கேயுள்ள கதராடையினர் செய்வதுபோல! அங்கேயுள்ள கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் சீக்கியர்களின் தனி நாட்டுக் கிளர்ச்சியினை ஆதரித்துப் பெரிய நீண்ட அறிக்கைகளைத் தந்து உள்ளார்கள்! சீக்கியர்களின் மீது ஏவி விடப்பட்ட கடுமையான அடக்கு முறைகளையும் கடுமையாகக் கண்டித்தார்கள். ஆனால் அதே கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் தமிழ்நாட்டிலேயிருக்கிறார்கள், மிக மிகத் தாராளமாகவும் வேகமாகவும் திராவிடநாட்டுப் பிரிவினையை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் மதுரையில் கூடிய தங்களது தேசிய கௌன்சில் கூட்டத்தில்கூட திராவிட நாட்டுக் கொள்கையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தேவையற்றதான ஒரு அறிவிப்பை எல்லாப் பேச்சாளர்களும் சொன்னார்கள். இங்கேயுள்ள சோசலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் கழகத்தின் இந்தி எதிர்ப்புக் கொள்கையைத் தீவிரமாகக் கண்டித்தார்கள். கழகத்தின் சிந்தனைக்கு அறிக்கை தந்தார்கள் ஆனால் சீக்கியர்களின் பஞ்சாபி மொழிக் கொள்கையைப் பெரிதும் பாராட்டி ஆதரித்தார்கள்! வடநாட்டிலேயிருக்கும் சோசலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் காங்கிரசுக்காரர்களை எதிர்த்து வீழ்த்த வேண்டுமென்றால் எவருடனும் கூட்டுச் சேருவார்கள்- சேர்ந்திருக்கிறார்கள்! ஆனால் அதே கட்சிக்காரர்கள்கழகத்தின் எல்லா நியாயங்களும் நிரம்பிய பிரிவினைக் கீதத்தைக் கேட்கத் தயாராக இல்லை! அகில இந்திய ஒற்றுமைப் பண்பினைக் கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் காங்கிரசுக்காரர்களும் சீக்கியர்களுக்குச் சொல்லி அவர்களின் முயற்சிகளை மாற்ற முடியவில்லை. முயலவில்லை. ஆனால் கழகத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதில் முன்னோடிகளாக இருக்கிறார்கள். காரணம் கட்சிகளின் கடிவாளப் பிடி வடவர்களிடத்திலே இருப்பதுதான்!

சான்றுகள்தாம் இல்லை! சாதனைகளாவது உண்டா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினை ஏகபாரதத்தின் பெருமையைக் குலைப்பதென்றால் வடநாட்டிலே தனி நாட்டுக் கிளர்ச்சிகள் தாராளமாக நடைபெறுகின்றன. நாகர்நாடு அமைக்கப்பட்டுவிட்டது சில குறைபாடுகளுடன். இந்திய சர்க்கார் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு அதிகாரத் திமிரை ஒதுக்கி வைத்துவிட்டு புதிய சட்டங்களையும் திட்டங்களையும் வேகமாகச் செய்து காட்டிவிட்டார்கள்! திராவிடப் பிரிவினை உணர்ச்சிக்கு மராட்டியத்தையும் பஞ்சாபையும் சான்றாகக் காட்டினால் அவைகள் மாநிலங்கள்-தனி நாடல்ல என்ற விளக்கத்தைச் சொல்லிய விவேகிகள் - அரசியல் விதவைகள் நிறைய உண்டு!

'நாகர் நாடு' ஏன் தனி மாநிலமாக அழைக்கப்பட்டு அமைக்கப்படவில்லையென்றால் ஆட்சிபீடத்தவர் நாகர்களின் தனிநாட்டு உரிமையை உணர்ச்சியை மதிக்கிறோம் என்று சொல்கிறார்கள்! மாற்றுக்கட்சியினரைக் கேட்டால் மண்ணைக் கவ்வுகிறார்கள்;மார்பு தட்டிப் பேசத் துணிவில்லை! ஆனால் இதே மாவீரர்கள் தான் முன்னேற்றக் கழகத்திற்குப் பதில்கூறப் படை திரட்டிக் காட்டுகிறார்கள்! அகில இந்திய ஒற்றுமைக்குச் சரியான சான்றுகளைக் காட்டாவிட்டாலும் சாதனைகளையாவது காட்டமுடிகிறதா? நிச்சயமாக இல்லை. வங்கமும் அசாமும் ஒரே தாயகத்தின் இரு பகுதிகள் - இருந்தாலும் ஒன்றாக இருக்கத் தயாராக இல்லை ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்கிறார்கள். அமளிகள் அடக்கு முறைகள் பிணங்கள் தொகை தொகையாகக் குவிந்துவிட்டன! தென்னகத் தாயகம் விடுதலை பெறக்கூடாதென்று கூச்சல் போடுகின்ற எத்தனையோ சோமாளிகள் அங்கே இரு வரிசையிலே நின்று ஆதரிக்கிறார்கள்! சுதந்திர தினமென்று சொல்லப்படும் போலித்தனமான கொடியேற்று நாளை வங்க சர்க்கார் இந்த ஆண்டு ஏற்றுக்கொள்ளவில்லை! நேருவின் சர்க்கார் ஏனென்று கேட்க முடியவில்லை. நேருவையும் பந்துலவையும் பொம்மை கட்டித் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள் வங்கத்தவர்!

வடநாட்டுக்கு அடிபணியும் அரசாங்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் விடுதலைக் கிளர்ச்சி, டில்லியிலேயிருக்கும் ஆதிக்க வெறியர்களும், இந்தியாவைப் பிரிக்கவே முடியாதென்று பேசுகின்ற ஆணவக்காரர்களும் ஒப்புக்கொள்ள வேண்டிய இலட்சியம் என்பதனை மிகவும் சிறப்பாக இன்றைய வடநாடு உறுதி செய்து காட்டுகிறது. குடியரசுச் சட்டத்தின் பெருமைகளைச் சொல்லியோ நேருவின் புன்னகையைப்பற்றிப் பேசியோ, பிரசாதின் குவித்த கரங்களின் பாவனையைச் சொல்லியோ பிரிவினை உரிமைகளைப் பறித்துவிடத் துணிவது அரசியல் அறிவுடைமையாகாது! லெனின்கிராடிலும் டாஸ்கெண்டிலும் மாஸ்கோவிலும் போய் இந்திய மக்களின் ஏகத் தலைவன் எனப் படம் காட்டிவிட்டு அய்தராபாத்துக்கு ஓடி வந்து சென்னையிலே கொடியேற்றிவிடுவதினாலே நிலை நாட்டிவிட முடியாது! வட நாட்டிலே தனி நாட்டு உரிமைகள் தேவையென்று விரும்பி ஒவ்வொரு பகுதி மக்களும் எழுச்சிக் குமுறல் காட்டும்போதெல்லாம நேருவின் சர்க்கார் அடிபணிந்து வருகிறது! தென்னாட்டு விடுதலைக் குரல என்றால் விசாரித்துப் பேசும் விவேகம்கூட பெற்றுக்கொள்வதில்லை. வட நாட்டவர் புகழ்பாடி டில்லியின் பெருமைகளைப் பயன்படுத்திப் பிழைத்துக்கொள்ளும் கட்சியினரின் தொகை எவ்வளவு பெரியதாக இருந்தாலும் நேரில் காணும் உண்மைகளைக்கூட மறந்துவிடும் அநாகரிகப் பண்பு தென்னவர்க்குத் தீங்கு செய்யும் தீய பண்பாகும்! முன்னேற்றக் கழகத்தினை எதிர்க்க வேண்டும் என்பதற்காக இந்திய ஒற்றுமையை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் தங்களின் கட்சித் தலைமையினரைத் தட்டிக் கேட்கும் துணிவு பெற்றவர்களா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்! தென்னாட்டை வஞ்சிக்கும் வடநாடு, வாழ்கிறது வளர்ந்தோங்கிவிட்டது என்பதை திட்டமுறைகளிலே ஒப்புக்கொள்ளும் கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் சொரணை வரும நேரத்தில் அனுமதிக்கும் காங்கிரசுக்காரர்களும், கழக இலட்சியத்தினைக் கைவிடும்படி நேசக்கரம் நீட்டுவது சரியாகுமா?

செய்திச் சுழல்

"தமிழ்நாடு" என்று பெயர் வைக்க சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம்

சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று தீர்மானத்தை 22-9-60 அன்று சென்னை மாநகராட்சி மன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். திரு. பட்சிராஜன் அவர்கள் முன் மொழிய திரு. மா. சு. சம்பந்தன் அவர்கள் வழி மொழிய மேயர் அப்துல்காதர் தலைமையில் இத்தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றிய மாநகராட்சி மன்ற உறுப்பினர் அனைவரையும் பாராட்டுகிறோம்.

சேலத்தில் கூடிய தமிழகப் புலவர் குழுவிறகுச் சேலம் நகர சபை வரவேற்பளித்தது. அங்கு சென்றிருந்த டாக்டர் சிதம்பரநாதனார் சென்னை மாநிலம் "தமிழ்நாடு" ஆக வேண்டியதைக் குறித்து வற்புறுத்திப் பேசியிருக்கிறார். "தமிழ்நாடு" எனப் பெயரிடாதது கண்டு குருதி கொதிக்கிறது என்று டாக்டர் மு. வரதராசனார் கூறியிருக்கிறார்.

டாக்டர் வரதராசனார், டாக்டர் சிதம்பரனார் போன்ற பேராசிரியர்கள் தமிழர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் உயர்ந்தோர்கள். அவர்கள் உள்ளம் கொதிக்கிறதென்றால், தமிழ் மக்கள் உள்ளமெலாம் பெருங் கொதிப்பெடுத்திருக்கிறது என்று பொருள்.

ஆகவே, ஆளுகின்றவர்கள், நாள் நட்சத்திரங்களைப் பார்க்காமலும், தங்களுக்குள்ள நன்மை தீமைகளைப் பார்க்காமலும் உடனடியாக "தமிழ்நாடு" என்ற பெயரை இந்த மாநிலத்திற்கு வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சோற்றுப் பிரச்சினை

மான அவமான உணர்ச்சியில்லாத காமராசருக்கு மட்டும் "தமிழ்நாடு" என்று பெயர் மாற்ற வேண்டியது அவசியமென்று தோன்றவில்லை. பெண்ணாடத்திலே பேசும்போது உணவுப் பிரச்சினைதான் முக்கியமே தவிர, பெயர் மாற்றத்தால் பயன் ஒன்றும் வந்துவிடப் போவதில்லை. என்று பேசியிருக்கிறார்.

உணவுப் பிரச்சினைதான் முக்கியமென்று கருதுகிற காமராசர் அதையாவது தீர்த்து வைத்திருக்கிறாரா என்றால் அதுவுமில்லை. அவரும் ஆளுகிறார், சோற்றுப் பிரச்சினையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டுதான் வருகிறது. முக்கியம் என்று சொல்லப்படுகிற அந்தப் பிரச்சினையை அவர் ஆட்சிக்கு வந்து இத்தனையாண்டுகளாகியும் தீர்க்க முடியவில்லை. இன்றும் வெட்கமில்லாமல், அதுதான் முக்கியம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார் ஒருவேளை அவருடைய, சொந்தச் சோற்றுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதுதான் முக்கியம் என்று கூறினாரோ என்னவோ, எங்கேதான் மக்களின் குரலுக்கு மதிப்பளித்து "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க ஒப்புதலான வார்த்தை சொல்லிவிட்டால், மேலிடத்தின் கோபம் வந்துவிடுமோ, என்று பயந்துகூட அவர் கூறியிருக்கலாம்.

இப்படிப்பட்ட தன்னலவாதிகள் எல்லாம் ஆட்சிப்பீடத்தைப் பற்றிக் கொண்டு இருப்பதால்தான் நாட்டிலே பஞ்சமும் பட்டினியும் அவற்றின் காரணமாக மானமற்ற தொழில்களும் பெருகி வருகின்றன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஐந்தாண்டுத் திட்டக் கண்டன வாரம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய பொதுக்குழுவிலேஜந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்படுவதைக் கண்டித்துத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அக்டோபர் பத்து முதல் ஐந்தாண்டுத்திட்டக் கண்டன வாரம் நடத்த வேண்டும் என்று அண்ணா அறிக்கை விடுத்துள்ளார்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் நடத்தப்படுகின்ற முறையைக் கொஞ்சஞ் சிந்தித்துப் பார்த்தாலும் ரத்தம் கொதிக்கும்! ஐந்தாண்டுத் திட்டங்களை நடத்துவதற்காக பொது மக்களுக்குக் கோடி கோடியாக வரி போட்டுக் கொடுமைப் படுத்துகிறார்கள். இதனால் நாட்டில் விலைவாசிகள் ஆண்டுக்காண்டு விஷம்போல் ஏறுகின்றன. திட்டங்கள் வகுக்கப்படும் காலங்களில் இரட்டிப்பாக ஏறுகின்றன. இதுதவிர அயல்நாடுகளிலிருந்தும் கோடிக் கணக்கில் கூசாமல் கடன் வாங்குகிறார்கள்.

இத்தனை பணத்தையும் சேர்த்து என்னதான் செய்வார்களோ தெரியவில்லை. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தும் எவ்விதமான உருப்படியான பலனும் கிடைக்கவில்லை.

இத்துடன், திட்டங்கள் வகுப்பவர்கள், தென்னாட்டுக்குத் தேவையான பிரச்சினைகளுக்காக எதுவுமே ஒதுக்குவதில்லை. நமது மந்திரிமார்கள் நெருங்கிக் கேட்டால், திட்டத்தில் இடமில்லை என்று மிக எளிதாகக் கூறிவிடுகிறார்கள். எதிர்த்துக் கேட்க முடியாமலும், தட்டிச் சொல்ல முடியாமாலும் இருக்கிறார்கள் இந்தத் தாசனு தாசர்கள்.

தென்னகத்தை வஞ்சிக்காதீர் தில்லி யரசினரே என்று ஊருக்கு ஊர் கூட்டங் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் செய்து இந்திய அரசினருக்கும், சென்னை மாநில அரசினருக்கும் தீர்மானங்களை அனுப்புங்கள் என்று தென்னக மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

இருவரும், தப்பித்தவறி மணவாளன் மாலாவோடு நட்புக் கொண்டு விட்டால் 'நிலைமை' மாறிவிடுமே யென்று நினைத்து...மணவாளனைப் பற்றி சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம் தாக்கிப் பேசி வந்தனர்.

மணவாளனும், மாலாவும் ஒருவருக்கொருவர் நட்புக்கொள்ளும் அளவுக்கு சூழ்நிலை அவ்வளவு நெருக்கமாக இருந்தது! மணவாளன், 'கார்த்திகேயன் கம்பெனி'யிலே காஷியராக இருந்தான். மாலாவும் அதே கம்பெனியிலே 'டைப்பிஸ்டா'க இருந்தாள். மாலா போய்ச் சேர்ந்தபோதிருந்த உத்தியோக முறை இது. பிறகோ, மணவாளன் காஷியர் பதவியிலிருந்து கீழே தள்ளப்பட்டு சாதாரண குமாஸ்தாவாக்கப்பட்டான். பண இருப்பை சரியானபடி வைத்துக்கொள்ளாததே அவனது பதவி இறக்கத்துக்குக் காரணமாகவிருந்தது. வேண்டுமென்றேதான் அம்மாதிரி தவற்றைச செய்தான் மணவாளன். 'கார்த்திகேயன் கம்பெனி' முதலாளி காளமேகம், மணவாளனுக்குப் புரியாத புதிராக இருந்தார். பல பெரிய இடங்களிலே எழுதும் கணக்கைப் போலத்தான் 'இரண்டு' கணக்கு எழுத ஏற்பாடு செய்திருந்தார். அதைவிட அடிக்கடி வந்து கணக்கு எழுதவேண்டாமென்று பணத்தை வாங்குவதும், லட்சக்கணக்கிலே பணத்தைக் கொண்டுவந்து தந்து 'இதற்கு' கணக்கு வைக்கவேண்டாமென்று சொல்லியதும்,அதிக திகைப்பைப் தந்தது மணவாளனுக்கு. எனவே, அந்த தொல்லையிலிருந்து விடுபடுவதற்காக கணக்கை சரியாக வைத்துக்கொள்ள முடியாதவனைப் போல நடித்தான் மணவாளன். தனது ஏற்பாடுகளுக்கு மணவாளனின் திறமை போதாதென்று கண்டு கொண்ட காளமேகம், குமஸ்தா வேலையிலே தூக்கிப்போட்டார். அந்த குமஸ்தா வேலையிலும் அவன் இல்லாமலிருப்பதற்காக சுகுமார் எவ்வளவோ பாடுபட்டான். 'காத்திகேயன் கம்பெனி'க்குக் கால முழுதும் உழைத்துத் தேய்ந்த மணவாளன் தந்தையின் சேவைக்கு நன்றி காட்டும் முறையிலே, அவனை வேலையைவிட்டு நீக்காமலிருந்தார்.

சுகுமாரனுக்கு இது பெரிய ஏமாற்றமாக இருந்தாலும், வெளியே வேண்டாதவர்களிடம் பிரசாரம் செய்வதற்கு இது நல்ல சந்தர்ப்பத்தைத் தந்தது. மாலாவும், மணவாளனை நாசகாரனாக நம்பத் துவங்கினாள். கம்பெனியிலே அவனைத் தாண்டித்தான் அவள்போகவேண்டியிருந்தது. அப்போதுகூட அவன் பக்கம் திரும்பாமலே வேகநடை போட்டுப் போய்விடுவாள். கம்பெனியிலிருந்த எல்லாரையும்விட வயதில் குறைந்தவனாகவும், அழகில் சிறந்தவனாகவும் மணவாளனிருந்தான். கட்டான உடலும், கவர்ச்சியான முகமுமிருந்தாலும், நெஞ்சத்தினுள்ளே எண்ணங்களுக்கு நஞ்சைத் தடவி வருவதாக மாலா நினைத்து வந்தாள். குறிப்புகளைக் கொண்டு வந்து மணவாளன் கம்பெனியிலே 'டைப்' செய்யத் தரும்போதுகூட, அதை வாங்கி வைத்துக்கொண்டு 'அடித்து அனுப்புவதாக'க் கூறி முதலில் அவனை அனுப்பி வைத்துவிடுவாள் மாலா.

மாலா தன்னை வெறுப்பது மணவாளனுக்குப் புரியாமலில்லை. இன்ஸ்பெக்டரின் மகளுக்கு அந்த மிடுக்கு இயற்கையிலேயே அமைந்துவிட்டதாகக் கருதினான். ஆனால் தன்னைக் கண்டு ஒதுங்க நினைக்கும் மாலா சுகுமாரைக் கண்டதும் ஓடத் துடிப்பதை நினைத்து வேதனைப்பட்டான் மணவாளன். அவள் தன்னை வெறுப்பதை நினைத்து அவன் அதிகமாக வேதனைப் படாவிட்டாலும், சுகுமாரை நம்பிக் கிடக்கிறாளே என்பதிலேதான் கவலை மிகக் கொண்டான்.

யார் இந்த சுகுமார்?

அவனைப்பற்றி சரியாகப் புரியவில்லை என்றாலும், முழுக்க, முழுக்க ஏதோ ஆபத்தான தொழிலிலே அவன் ஈடுபாடு கொண்டிருப்பதை உணர முடிந்தது மணவாளனால்! அப்படிப்பட்ட அயோக்கிய சிகாமணியோடு... இன்ஸ்பெக்டர் சாம்பசிவத்துக்கு என்ன தொடர்பு இருக்க முடியும்? மாலாவைப போலவே அவரும் அவனது வேடத்தைக் கண்டு மயங்கியிருக்கிறாரா? இல்லை... அவருக்கும் அவனது தொழிலிலே பங்கிருக்கிறதா?... மணவாளனால அந்தப் புதிருக்கெல்லாம் சாமானியமாக விடை தெரிந்து கொள்ள முடியவில்லை. அதைத் தெரிந்துகொள்வதற்காகத் தான் அவர்களது பாதையிலே வேண்டுமென்றே குறுக்கிட்டான். அவர்களைத் தொடருவது அவனுக்கு அவ்வளவு சிரமமாகத் தெரியவில்லை. காரணம் அவர்கள் அந்த ரகசியத் தொழில் நடத்திய பாதையிலே 'கார்த்திகேயன் கம்பெனி'யும் ஒரு முகாமாக விருந்து வந்ததை எப்படியோ அறிந்திருந்தான்.

சுகுமார் காளமேகத்திடம் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பான். அவன் வரும்போதெல்லாம் ஒரு கறுப்புநிறத் தோல் பையைக் கையோடுகொண்டு வருவதும், போகும்போது அதே தோல் பையோடு போவதுமாகவிருந்தான். அவன்,மேல் மாடியிலிருக்கும் காளமேகத்தைக் காணவரும்போது.. யாரையுமே அவர் அங்கிருக்க அனுமதிக்கமாட்டார். காளமேகமும் சுகுமாருமே தனித்திருப்பார்கள். அந்தத் தோல்பெட்டியிலே என்ன கொண்டு வருகிறான்? போகும்போது என்ன கொண்டு போகிறான்? தெரிந்துகொள்ளப் படாத பாடுபட்டான் மணவாளன்.

அவன் காஷியராக இருந்த நாளையிலே சுகுமார் வந்து போகும் அன்றைக்கு இருப்பு லட்சக் கணக்கிலே குறையும். ஒதுக்கப்பட்ட கணக்கிலிருந்து!...இதிலிருந்து சுகுமார் தோல் பையிலே கொண்டு போகும்போது 'கரன்ஸி நோட்டுக் கட்டை'க் கொண்டு போகிறானென்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது மணவாளனால். ஆனால்,அவன் வரும்போது அப்படி என்ன கொண்டு வருகிறான் அந்தப் பொருள் அவ்வளவு விலை மதிப்புள்ளதா என்ன? கள்ளக் கடத்தல் தங்கமோ!...அபினோ... இன்னும்...இதுபோல ஏதாவதொன்றாகத்தானிருக்க முடியும்? மணவாளனின் எண்ணங்கள் ரகசியத்தின் உண்மையை நெருங்கிகொண்டிருந்தன.

அடுத்த இதழில் முடியும்.

தென்றல் முல்லை இரண்டுக்கும்

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை:—

மானாமதுரை	பாலக்காடு
காரியாபட்டணம்	சிங்கநல்லூர்
சோளிங்கபுரம்	தங்கச்சிமடம்
மகாபலிபுரம்	கன்னமங்கலம்
திருத்தணி	சுங்குவார்சத்திரம்

விவரங்கட்கு

தென்றல் : சென்னை-6

குறள் விழாக் கவியரங்கம்

8. திருவள்ளுவர் ஒரு சமத்துவச் சான்றோர்

கவிஞர் முடியரசன்.

கண்ணதாசன் முன்னுரை.

பிடிபரிகள் பரிசீந்தால் பாட்டுப் பாடும்
பெருப்புலவர் அந்நாளில் வாழ்ந்தி ருந்தார்
குடிப்பதற்குக் கூழ்தந்தால் பாட்டுப் பாடும்
கூனல்முது கிழவிஒரு காலம் வாழ்ந்தாள் !
படியரிசி தந்தாலும் பாடிப் போகும்
பரிதாபக் கவிஞர்களும் பின்னுல் வாழ்ந்தார்
முடியரசோ நண்பர்களின் முகத்துக் காக
முன்நூறு கல்கடந்தும் கவிதை யாத்தார் !

கொடியவனே ! தமிழாலே இளைஞர் தம்மைக்
கொன்றுவிடும் கொலைகாரப் புலவா ! உன்னை
முடியரசே ! என்றழைத்த முறையை யெண்ணி
முன்னிருக்கும் ரசிகர்களின் செவியில் பாட்டால்
அடிகொடுத்தால் முடியரசர் ஆவ துண்டோ ?
அடியரசன் நீ என்பேன் ஆன போதும்
முடியரசே பாட்டை எவக் கேட்கமாட்டேன்
முடிக்காமல் தொடர்க!அதை நானும் கேட்பேன் !

துவக்கவுரை

கண்ணனுக்குத் தாசனெனப் பேர்கொண் டாலும்
கனிமொழியாம் தமிழ்மொழிக்குத் தாச னாகும்
பண்ணினிக்கும் கவிவலவ ! கவிகாள் ! சான்றீர் !
பணிந்தெனது கவிசொல்வேன் இவ்வ ரங்கில்.

வள்ளுவனை வழிகாட்டி என்று பாட
வன்பாகக் கைகாட்டி விட்டார் நண்பர் ;
தெள்ளுதமிழ் நாவலனை உளத்திற் கொண்டு
சிந்தனையாம் பேருலகம் நோக்கிச் சென்றேன் ;
துள்ளுநடை போடுகையில் வழியி ரண்டு
தோன்றுவதைக் கண்டங்கே மலைத்து நின்றேன் ;
தெள்ளியநல் வழிஎதுவோ என்று நெஞ்சம்
தெளியாமல் இருவழியும் நோக்கி நின்றேன்

வடக்குவழி தெற்குவழி என்றி ரண்டுள்
வடவழியிற் புகத்துணிந்தேன் வாடைக் காற்று
நடுக்கியது ; மனம்வெறுத்துத் திரும்பி விட்டேன்
நல்வழியாம் தென்வழியில் நடந்து சென்றேன் ;
நடக்கையிலே மணத்தோடு தென்றல் வந்து
நலந்தரலால் புலமெல்லாம் மகிழக் கண்டேன்
கடக்களிறு போல்நடந்தேன் சிலபேர் கூடிக்
கலகலவென் றவ்விடத்தே சிரித்தல் கேட்டேன்

நடைநிறுத்தி அவர்தம்மை நோக்கி நின்றேன் ;
நன்கணிந்த திருநீறு குவிந்த கொண்டை
தடையின்றி வளர்ந்திருக்கும் தாடி மீசை
தளதளத்த மார்பிடத்தே பட்டை நூல்கள்
இடையிலொரு நீள்கச்சை இந்த வேடம்
ஏற்றவரும் தலைமழித்துப் பட்டை நாமம்
உடையவரும், வடநாட்டுக் கொண்டை யிட்ட
உடல்வலிமை கொண்டவரும் அங்கு நின்றார்

நகைக்கின்ற பெரியீரே ! நீவி ரெல்லாம்
நானறியப் புகல்வீரோ யாவீர் என்று ?
திகைக்கின்றேன் அருள்புரிக என்றேன் ; ' எம்மைத்
தெரியாயோ ?, வள்ளுவர்தாம் நாங்கள் ' என்றார்
வகைக்கொருவர் நிற்கின்றார் ! எத்து ணைப்பேர்
வள்ளுவர்கள் ! என்றயிர்த்தேன் ; அந்த வேளை
நகைக்கின்ற பேரொலியும் கேட்ட தங்கே
நான்நின்றேன் அவரெல்லாம் மறைந்து விட்டார் !

நகைத்தவர்யார் எனவினவி நின்றேன் ; ஆங்கே
' நான் ' என்ற விடைகேட்டேன் உருவ மில்லை ;
' திகைக்காதே வள்ளுவன்நான் உன்றன் நெஞ்சுள்
சிரிக்கின்றேன் என்னுருவம் காணாய் தம்பி
உதைத்தெழும்பும் உணர்வுடனே எங்கு வந்தாய் ?
உன்விழைவு யா ' தென்ன, வணங்கி நின்று
பகைப்புலத்தர் சூழ்ச்சியெலாம் தப்பி வந்த
பாவலனே உனையொன்று வேண்டு கின்றேன்

காலமெலாம் துன்பங்கள் சூழு மேனும்
கவலையிலா மனிதனென வாழ வேண்டும்
ஞாலமெலாம் ஆள்பவனே தீமை ஒன்றும்
தன்னுமல் வாழ்வெல்லாம் இயங்க வேண்டும்

மேலவனே வழிபுகல்வாய் என்றேன் ; ' தம்பி
மேதினியில் அறநூல்கள் காட்டு கின்ற
சீலநெறி செல்வோர்க்குக் கவலை யில்லை
சிறுமையில்லை என்றென்றும் தீமை யில்லை

அறத்தினுமோர் சிறப்புமிகும் ஆக்கம் இல்லை
அவ்வொன்றை மறப்பதைப்போல் கேடும் இல்லை
அறத்தாலே வருவதொன்றே இன்பம் ஆகும்
அஃதின்றேல் புகழில்லை பொருளும் இல்லை
அறச்செயலே செயற்பால தாத லாலே
அச்செயலே எவ்வவெரும் செய்தல் வேண்டும்
மறச்செயலைத் தவிர்த்தறமே புரியும் மாந்தர்
மனக்கவலை அற்றவராய் வாழ லாமே !'

வள்ளுவர்சொல் கேட்டவுடன் ஐயா நின்றன்
வாய்மொழியின் வழிநடக்கச் செல்வம் என்பால
வெள்ளமென வாய்த்திருக்க வேண்டு மன்றோ ?
வெறுங்கையால் அறஞ்செய்தல் இயலும் ஒன்றோ ?
உள்ளநிலை சொல்கின்றேன் கோவில் கட்ட
ஊருண்ணும் விடுதிகட்ட மடங்கள் கட்ட
உள்ளினும்நான் காசுக்கு யாண்டுச் செல்வேன்
உத்தமனே இதற்குமொரு வழிகாட் டென்றேன்

' சிறியவனே அஃதன்று ; நான்பு கன்ற
சீரியநல் லறம்வேறு ; செல்வர் தாமும்
வறியவரும் பின்பற்றும் அறமே சொன்னேன் ;
நான்காட்டும் வழியிடத்துத் தொல்லை யில்லை
அரியதுமன் றெளியவழி செலவோ இல்லை
அகத்துக்கண் மாசிலனய் அமைதல் ஒன்றே
பெரியதொரு அறமாகும் இவ்வ றத்தைப்
பேணிநலம் பெறுதற்குப் பொருளா வேண்டும் ?

இன்னும்கேள் ! முகம்மலர்ந்தும் இனிது பார்த்தும்
இதயத்துப் பொருந்திவரும் இனிய சொற்கள்
பன்னுதலை அறமென்றேன் பொருளால் நன்மை
பயக்கின்ற சொற்களைத்தன் மனத்தால் ஆய்ந்து
கன்னலென இனியசொலின் தீமை தேய்ந்து
கனிவுதரும் அறம்பெருகும் எனவும் சொன்னேன்
பொன்னணிகள் ஈதலினும் இனிய சொல்லைப்
போற்றுதலே பேரறமாம் என்றும் சொன்னேன்

மற்றொருவன் நல்வாழ்வைக் காணும் போது
மனம்வெதும்பும் அழுக்காற்றில் ஐம்பு லன்கள்
சுற்றுகிற வழியெல்லாம் சுழல விட்டுத்
துய்க்கின்ற பேரவாவும் இவ்வி ரண்டால்
பற்றிவரும் வெகுளியுடன் இன்னச் சொல்லும்
பறித்தெறிந்து வாழ்வதுவே அறமாம் என்றேன்
சொற்றவெலாம் மறந்துவிட்டுச் சுற்று கின்றாய்
தூயநெறி காட்டிவிட்டேன் நடந்து செல்வாய்

காட்டியஇவ் வழிதனில்நீ நடந்து சென்றால்
கவலையிலா மனிதனென வாழ்வாய் தம்பி '
ஊட்டியஇவ் வறவுரைகள் நெஞ்சிற் கொண்டேன்
ஒப்பில்லா மொழிப்புலவ மற்றோர் ஐயம்
ஓட்டிடுக ! அறத்திலெல்லாம் சிறந்த தொன்று
துறவறமா இல்லறமா உரைக்க என்றேன்
' ஏட்டிலதைப் பார்த்திலையோ ? எல்லா ஏடும்
அறனென்ப தில்வாழ்க்கை ஒன்றே தம்பி

மாலையிட்ட மங்கையினை வஞ்சி யாமல்
மனம்விரும்பி இனியசொலி ஒன்று பட்டுக்
காலையிளம் பரிதியெனக் குழந்தை பெற்றுக்
கழறுகிற மழலைமொழி கேட்கும் இன்பம்
போலஒரு இன்பமிங்கே இல்லை ! இல்லை !
புரியாத தெரியாத உலகம் வேண்டிக்
கோலமது தவசியென வேட மிட்டுக்
கொடுமைசெயல் அறமன்று சிந்தை கொள்க

இல்லறத்தைச் செம்மையுடன் ஆற்று கின்றோன்
இந்நிலத்துப் பயன்அனைத்தும் பெற்று வாழ்வான்,
நல்லறத்தை விட்டுநின்று காவி தாங்கும்
நல்லபயன் துறவறத்தால் ஒன்றும் இல்லை,
இல்லறத்து நெறிநிற்போன் துறவ றத்தில்
இருந்துதவம் நோற்பாரின் நோன்மை கொள்வான்
கல்லடுத்த காடெதற்கு ? தவமெ தற்கு ?
கருணைதரும் இல்லறமே மேலாம் தம்பி !

பின்னுரை

அறம்பாடும் குலம்தோன்றி ! காலம் கண்டு
வள்ளுவனைத் தேர்ந்ததனுல் அமைதி சொண்டு
அறம்பாடி முடித்தவரே ! வாழ்க ! நாட்டில்
அறமென்றால் என்ன பொருள் இந்தவேளை
குறட்கழகம் கட்டவரும் கட்டி டத்தைக்
குறையின்றி முடிப்பதுதான் அறமாம் ! நானும்
சிறிதாக ஆயிரத்து ஒன்று தந்தேன்
செல்வர்களே ! செல்லுமுனம் நல்க நீரே !

வெண்பாப் போட்டி

பார்த்தானே பாவிப் பயல்.

குற்ற முளபாட்டுக் குண்டோ பரிசிலென்று
சற்றும் தயங்காமல் தானெழுந்து - குற்றமென்றே
ஆர்த்துரைத்தான் நக்கீரன் ; அச்சூறுத்த முக்கண்ணுல்
பார்த்தானே பாவிப் பயல்.

—கெ. பாலசுந்தரர், அரக்கோணம்.

பிள்ளைக் கனிபெற்றுப் பெண்டில்லம் வந்தாளே !
அள்ளி இதழ்சேர்த்தேன் அன்பாக ! - தள்ளிப்போ !
சேர்த்தணைக்க நானுள்ளேன், சேராதே ! என்பதுபோல்
பார்த்தானே பாவிப் பயல்!

—கரு திருவரசு, மலாயா.

" இன்றுவந்த இந்தியோ எட்டிக்காய் தென்னற்குத்
தென்றமிழோ என்றும் தெவிட்டாதே - என்றுரைத்த
சீர்த்திருத்தச் செம்மலைத் தேனியிலே கொல்வதற்குப்
பார்த்தானே பாவிப் பயல்"

—பொ. களஞ்சியம், நெல்லை.

தான்வாழும் நாட்டைத் தமிழகம் என்றழைக்க
ஊன்வாடி நின்றுர் உயர்சங் - கரலிங்கம்
ஏனென்று கேட்டான் ; இறுதிவரை வேடிக்கை
பார்த்தானே பாவிப் பயல்.

இரா. சிவசிதம்பரம் சிதம்பரம்.

தேனைக் கலந்து திகழ்பாலைத் தான்சேர்த்த
வானுர் பெருமை வளர்தமிழும் - தானிருக்க
ஆர்த்த புகழில்லா அவ்விந்தி தான்வைக்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

நா. மீனவன் கண்டரமாணிக்கம்.

கூடி எனைக்கெடுத்துக் கொள்ளைச் சுகம்பெற்றே
வாடித் தவிக்கவிட்டு மற்றொருத்தி - பாடிவர
ஆர்த்தானே தேடி அகன்றுனே நான்தவிக்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

—பொன்முருகாணியடியான், கோதைமங்கலம்.

நீல விழிசோர்ந்து நித்திலம்போல் நீர்சொரிய
கோலஞ்செய் வெண்டிங்கள் கொல்லுமால் - காலனவன்
கார்காலம் பூக்கின்ற காலத்தும் வேடிக்கை
பார்த்தானே பாவிப் பயல்.

—தி. எத்திராஜன், தருமபுரம்.

பாதக் குறடணிந்து பாசாங்கு பண்ணியவன்
வேத முழுதுணர்ந்த வித்தகன்போற் - சாதுவனுய்க்
காத்திருந் தென்னழகை வாயிற் கடையோரம்
பார்த்தானே பாவிப் பயல்!

—வித்துவான் கமலி, குமரி மாவட்டம்.

" அன்ன நடைநடந்து ஆடி அசைந்தெழில்
மன்னிய சீர்த்தியுள்ள மங்கையைத் - தன்னிரு
கூர்மையுள்ள கண்களால் கொல்வான்போல் உற்றுற்றுப்
பார்த்தானே பாவிப் பயல்."

கை. சுப்பிரமணியன் கருப்பேரி.

மாமா மகிழ்ந்தளித்த மண்பொம்மை வைத்திருந்தேன்
ஏமாற்றிக் கொண்டேக எண்ணியே - சோமாறி
கூர்த்த இருவிழியைக் கொட்டாமல் நின்றதனைப்
பார்த்தானே பாவிப் பயல்.

—எஸ். மாணிக்கம், இரணியல்.

ஏர்உழவே ஏற்ற எருதுகளை வாங்கிவர
சேர்த்துவைவதேன் காசுகளை ; சின்னமகன் - ஊர்சுற்றி
யாருமறி யாதெடுத்தென் எண்ணத்தை மண்ணுக்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

—கே. ஆர். சரசுவதிராசன், சென்னை-6.

பிடித்தென்னைப் பற்றி பிறழமண்ணில் வீழ்த்தி
அடித்ததோ டல்லாமல் கண்கள் - நொடியாமல்
கூர்விழியால் என்னைக் கொலைசெய்வான் போல்வெறித்துப்
பார்த்தானே பாவிப் பயல்.

—அருளழகன் மூலைநகரி.

கற்புமனை மாண்பு கடமை அழகுமுள
அற்பு மனையாள் அமைந்திருக்க - நற்செயலில்
பார் மெச்ச வாழாது பண்பில் விலைமாதைப்
பார்த்தானே பாவிப் பயல்.

—கு மன்னர்மன்னன், சென்னை-1.

கண்ணிரண்டும் இல்லாக் குருடனென்று காசுபிச்சை
எண்ணுது எவ்வளவோ ஈந்தேன்நான் - கண்டேன்பின்
ஓரிடத்தில், ஆங்கவன் கண்விழித்துக் காசெண்ணிப்
பார்த்தானே ! பாவிப் பயல்!

—ஆசிரியர் பெ. மு. பால்சுவாமி, நெல்லைமாவட்டம்.

பொதியிற் பிறந்து புகழிற் சிறந்தேழ்
சுதியை மணந்த தமிழே - மதியிலாப்
பார்ப்பான் வடமொழிப் பேயா லுனைக்கொலப்
பார்த்தானே பாவிப் பயல்.

—சேரன், திருமயம்.

ஊர்அலர் தூற்றிட உள்ளம் குறுகிடக்
கார்முகில் ஓட்டிடும் வார்குழல் - சோர்ந்திட
தார்புனை மார்பனெடு தண்ணிலவிற் கூடியதைப்
பார்த்தானே பாவிப் பயல்.

—இரா. இளவரசு, காரைக்குடி.

நெஞ்சம் நிறையழிய, நெட்டுயிர்ப்பே மூச்சாக,
அஞ்சனக்கண் முத்துக அன்புமகள் - கொஞ்சுகிளி
ஆர்த்தாலே அல்லலுற அச்செங்கண் ணுற்சிறிது
பார்த்தானே பாவிப் பயல்.

—பிசிரடியார், மதுரை.

கட்டத் துணியுமின்றி கால்வயிற்றுச் சோறுமின்றி
நெட்ட நெடுமரம்போல் நின்றவன்தான் - பட்டமரம்
கார்முகிலை கண்டாற்போல் கள்ளக் கடல்வழியைப்
பார்த்தானே பாவிப் பயல்.

—தி கு. இராமகிருட்டிணன் திருப்பத்தூர்.

ஊனுய் உயிராய் உயிர்க்கும் உயிராகித்
தேனுய் இனித்திடுந் தீந்தமிழை - தாய்மொழியைப்
பார்த்த விழியாலே பண்பில்லா இந்தியினைப்
பார்த்தானே பாவிப் பயல்.

—ந. இராதாகிருட்டினன் காரைக்குடி-2.

தாய்போல் தமிழிருக்க தாயகத்தை விட்டகன்றுல்
சேய்போல ஆங்கிலமும் சேர்ந்திருக்கப் - பேய்போல
சீர்கெட்ட இந்திதனைச் சேர்த்துப் படிக்கவைக்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

—சி. ராமசாமி பழனிவட்டம்.

வேதப் பொருளாய் விளங்குநற் கீதையென்(று)
ஓதி மகிழ்வோரே உய்த்துணர்வீர் - கீதைசெய்தோன்
நீர்த்துறையில் மாதர் நிருவாண மாய்நிற்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

—பம்மல் நா. செகநாதன் பல்லாவரம்.

கல்லாத வஞ்சகனை கற்றவனும் என்றேத்தி,
பொல்லாத சோதிடனும் பொய்கூறிப் - பல்லாண்டு
காத்திருந்த பாவைஎன்னைக் கள்வனிடம் தள்ளிவிடப்
பார்த்தானே பாவிப் பயல்.

—வெற்றிவேலன் கோவை.

வாடா மலரென்றுன் ; வான்நிலவு நீயென்றுன்,
தேடி அடையாத் திருவென்றுன் - கூடியபின்
பூவையெனை நோக்கிப் போவென்று விட்டுவிடப்
பார்த்தானே பாவிப் பயல்.

—"முத்துரான்" பொன்வாச்சி

எத்துணையும் யானறியா இன்னலுறு கேள்விகண்டு
சித்தம் கலங்கியந்தத் தேர்வினிலே - புத்தகத்தைப்
பார்த்தே எழுதுவதைப் வையவந்த ஆசிரியன்
பார்த்தானே பாவிப் பயல்.

—ஞானபூபதி காரைக்குடி-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/1[illegible]7 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 88510.